RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 10 • இதழ் 3 • செப்டம்பர் 2025 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்

VENMAI





LINEN PARK®
DHOTIS • SHIRTS • TROUSERS • FABRICS
by
RAMRAJ©
STORE LOCATION
Shop Online at
www.ramrajcotton.in
Available at Ramraj Showrooms And All Leading Textile Shops

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

*நல்ல எண்ணங்களும் நேர்த்தியான செயல்களும் கொண்டு
இல்லறத்தில் இனிமையும் நிறைவான செல்வமும் சேர்த்து
எல்லோருக்கும் பயன் தரும் நல்வாழ்வு வாழ வழிகாட்டும்*

# வளம்

## சிறப்பிதழ்

**என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.**



# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

புதுமணத் தம்பதியரை, 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க' என்று பெரியோர்கள் வாழ்த்துவது மரபு. எல்லா வளமும் நலமும் நிறைந்த வாழ்வே பெருவாழ்வு. அழியாத சொத்தாக விளங்கும் கல்வி, ஆரோக்கியமான நீண்ட ஆயுள், நம்பிக்கைக்குரிய நண்பர்கள், வாழத்தேவையான செல்வம், நிர்வாகத் திறன், நிதி மேலாண்மை, வாக்குத் தவறாமை, எதற்கும் கலங்காத மனவலிமை, அறிவு, ஒழுக்கம், ஆற்றல் மிக்க பேர் சொல்லும் பிள்ளைகள், மேன்மேலும் வளரக்கூடிய புகழ், பிறர் மீது அன்பு செலுத்துதல் என எல்லா வளங்களும் பெற்று மணமக்கள் நிறைவாழ்வு வாழ வேண்டும் என்பதாகப் பெரியோர்களின் வாழ்த்து அமையும்.

செல்வத்தை நல்ல காரியங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் மனம் வேண்டும். அதை உணர்த்தும் ஒரு கதை உண்டு.

சாதாரண நிலையில் இருந்த ஒருவருக்குத் திடீரென லாட்டரிச் சீட்டில் பெரிய தொகை கிடைக்கிறது. அதை வைத்து அவர் நிலம் வாங்குகிறார். ரியல் எஸ்டேட் வளர்ச்சி அதிகம் இருக்கும் பகுதி என்பதால், அதன் மதிப்புப் பல மடங்கு அதிகரிக்கிறது. இன்னும் பெரிய செல்வந்தராக உயர்கிறார். அவர் தொட்டதெல்லாம் வெற்றி என்பது போல அவர் பொருள் தேட எடுத்த முயற்சிகள் எல்லாம் மாபெரும் வெற்றி அடைந்தன. தேவைக்கும் அதிகமாகப் பணம் சேர்ந்தாலும், வாழ்வில் மகிழ்ச்சி இல்லை.

ஒரு குருவைச் சந்தித்து, "எனக்கு எல்லாம் இருந்தும் மகிழ்ச்சி மட்டும் இல்லை. ஏன்?'' என்று கேட்டார். குரு அவருக்கு எந்தப் பதிலும் சொல்லாமல், உணவுப் பொட்டலங்கள் அடங்கிய பெரிய மூட்டையை அவரிடம் கொடுத்தார். "என்னுடன் வாருங்கள், அப்புறம் பேசலாம்" என நடக்கத் தொடங்கினார். மூட்டையைச் சுமந்தபடி குருவின் பரிவாரங்களுடன் இணைந்தார் செல்வந்தர். சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவந்த அவருக்கு இந்த மூட்டையைத் தூக்கிக்கொண்டு நடப்பதே சிரமமாக இருந்தது. செல்வந்தர் இப்படி மூட்டை சுமந்து போவதை ஊரே வேடிக்கைப் பார்த்தது. இது அவருக்கு இன்னும் அதிக மன உளைச்சலைக் கொடுத்தது.

வழியில் ஓரிடத்தில் நின்ற குரு, "இப்போது எப்படி உணர்கிறாய்?" எனச் செல்வந்தரைக் கேட்டார். "நீங்கள் சொன்னதைச் செய்ததால் மனமகிழ்ச்சி வரவில்லை. மன உளைச்சலும், உடல் வலியும்தான் வந்தது" என்று அவர் புலம்பினார். குரு அவரைக் கூர்ந்து பார்த்து, "உங்களிடம் கொடுத்தது உணவுப் பொட்டல மூட்டை. வழியில் எவ்வளவு பேர் பசியுடன் எதிர்ப்படுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கலாமே" என்றார்.

செல்வந்தர் அரைமனதோடு அந்தக் கட்டளையை ஏற்றார். கனமான அந்த மூட்டையைச் சுமந்தபடி தொடர்ந்து நடந்து, வறியவர்களுக்கு உணவுப் பொட்டலங்களைப் பகிர்ந்தளித்தார். முன்பு சுமையை மட்டுமே நினைத்துக்கொண்டு நடந்தவர், இப்போது பசியோடு இருக்கிற முகங்களைக் கவனித்தபடியே நடந்தார். இப்போது மூட்டையின் பாரம் அவருக்குப் பெரிதாகத் தெரியவில்லை. பகிர்ந்துகொள்ளத் தொடங்கியதும் சுமையும் குறைய ஆரம்பித்தது. பசியாறிய பலரும் அவரை மனதார வாழ்த்தினர், கண்ணீர் ததும்ப நன்றி தெரிவித்தனர்.

மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியுமாகச் செல்வந்தர் நடக்கத் தொடங்கினார். "இப்போது எப்படி உணர்கிறாய்?" என்று குரு கேட்டதும், "பாரம் முதுகிலும் இல்லை... மனதிலும் இல்லை. பசி நீங்கியவர்களின் முகத்தைப் பார்க்கும்போது இன்னும்கூட இரண்டு மூட்டை பாரத்தைச் சுமக்க முடியும் என்கிற நம்பிக்கை வருகிறது. அதே நேரம் மகிழ்ச்சியும் கிடைத்துச் செல்வத்தின் பயனும் புரிகிறது'' என்றார் செல்வந்தர். வறண்டு இருந்த அவரின் மனமும் வாழ்வும் வளம் நிறைந்து செழிக்க குரு அவரை வாழ்த்தியதாக ஒரு கதை படித்திருக்கிறேன். நானும் இதை அனுபவப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன்.

ராம்ராஜ் காட்டன் நிறுவனம் வளர்ச்சியின் பாதையில் நடைபோடத் தொடங்கிய காலத்தில் இருந்தே, கிடைக்கிற லாபத்தில் நிலம் வாங்கிப் போடுமாறு என் நலம்விரும்பிகள் கூறிக்கொண்டே இருப்பார்கள். குறிப்பிட்ட இடத்தைக் காட்டி, "ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இதை வாங்கச் சொன்னேன். அப்போது 10 லட்சம் இருந்த இடம் இன்று இரண்டு கோடி'' என்று ஏதோ கணக்குச் சொல்வார்கள். நகரமய வளர்ச்சியில் நிலங்களின் மதிப்பு அதிகரித்துக்கொண்டே போவது மறுக்க முடியாத உண்மை. "நாம் உழைக்கவில்லை என்றாலும், நாம் வாங்கிப்போடும் நிலம் நமக்காக இரவு பகலாக உழைத்துக்கொண்டே இருக்கும். மற்ற முதலீடுகளைவிட ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்தால் பல மடங்கு லாபம் வரும்" என்பார்கள்.

'தொழிலில் கிடைக்கிற லாபத்தைத் தொழிலில்தான் முதலீடு செய்ய வேண்டும்' என்கிற குறிக்கோள் எனக்கு



எப்போதுமே இருந்து வருகிறது. இரண்டு கோடி ரூபாய் போட்டு ஒரு நிலம் வாங்கி, பத்து வருடம் கழித்து விற்பனை செய்தால் நிறைய லாபம் கிடைக்கலாம். ஆனால், அதில் எனக்கு மட்டுமே பயன் கிடைக்கும். இதே நான் தொழிலை விரிவுபடுத்தினால், அதில் ஆயிரம் பேர் நேரடியாக வேலை செய்வார்கள். சில ஆயிரம் பேர் மறைமுகமாக வேலைவாய்ப்புப் பெறுவார்கள். ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு அந்த முதலீடு பயனுள்ளதாக அமையும். உழைப்பு, ஊதியம், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் பொருளாதார மேம்பாடு என ஒரு தொழிலால் விளையும் நன்மைகள் அதிகம். தொழில் மூலம் கிடைத்த லாபம் எனக்கு மட்டுமின்றி, பலருக்கும் பயனுள்ளதாக அமையும். இந்த நோக்கத்தில் இப்போதுகூட எனக்குத் தடுமாற்றம் வரவில்லை.

எல்லாக் கணக்கையும் தாண்டி நம் வாழ்வு பிறருக்கும் பயன்படுவிதமாக அமையும்போது அது வளம் நிறைந்ததாக மாறிவிடுகிறது. கதையில் வருவது போல, நம்மால் பயனடைந்தவர்கள் வாழ்த்தும்போது, எவ்விதமான பாரமும் பெரிய விஷயமாகத் தெரிவதில்லை. ‘பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் குடும்பங்கள், நெசவாளர்களின் குடும்பங்கள் வளம் பெறவே இயங்கிக்கொண்டிருக்கிறோம்’ என்று நினைக்கும்போது என் சிந்தனை வளமும், செயல்திறனும் பல மடங்குக் கூடுகிறது. பயனடைந்தவர்களின் வாழ்த்து, எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. இன்னும் உழைக்க வேண்டும் என்கிற உத்வேகத்தைக் கொடுக்கிறது.

மண் வளம்பெற வேண்டுமெனில், அதை நன்றாக உழுது, விதைத்து, நீர்ப்பாய்ச்சி, களை எடுத்து, உரிய காலத்தில் அறுவடை செய்ய வேண்டும். இந்த முயற்சி ஒரு தொடர் செயல்பாடு. பணத்தைக் கொண்டுபோய் நிலத்தில் போட்டால் பயிர் விளையாது.

வளம் நிறைந்த மனித வாழ்வு என்றால், உடல்நலன், மனவளம், அறிவு வளர்ச்சி, ஆன்மிகச் செழிப்பு, சமூக உறவு, சுற்றுச்சூழல் இணைவு என இவை அனைத்தும் ஒருங்கிணைந்த நிலை. ‘வளம் என்பது நாம் சேமிப்பது மட்டுமல்ல; நாம் வாழும் முறையும், அடையும் மகிழ்ச்சியும்தான் வற்றாத வளம்’ என்பதை நினைவில் கொள்வோம்.



The Culturepreneur

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

நகருக்கு வந்த புது பல் டாக்டரிடம் சிகிச்சைக்குச் சென்றார் ஒருவர். தன் பற்களில் கறை படிந்திருப்பதால் சுத்தம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மனதுக்குள், 'இதற்கு எத்தனை ஆயிரம் கேட்பாரோ' என்ற பதைபதைப்பு. டாக்டர் அவரது பற்களைப் பரிசோதித்துவிட்டு, "இந்தக் கறைகளுக்குப் பயப்படாதீங்க. தினமும் இரண்டு வேளை பிரஷ் பண்ணுங்க, கொஞ்சம் கொஞ்சமா சரியாகிடும்" என்று சொல்லிவிட்டு, அவர் வழக்கமாகப் பயன்படுத்தும் பேஸ்ட்டையும் பிரஷ்ஷையும் மாற்றச் சொன்னார். உணவுப்பழக்கத்தில் சில மாற்றங்கள் சொன்னார். சூடாக, ஜில்லென எதையும் சாப்பிட வேண்டாம் என அட்வைஸ் செய்தார். ஃபீஸ் எதுவும் வாங்கவில்லை.

வந்தவர் தயங்கிக் கேட்க, "நான் உங்களுக்குச் சிகிச்சையும் கொடுக்கலை, மருந்தும் எழுதித் தரலை. எதுக்கு ஃபீஸ்" என்று டாக்டர் கேட்டார். டாக்டரின் நேர்மையால் திகைத்த அந்த நோயாளி, பலரிடமும் இதைச் சொன்னார், தனக்கு நெருங்கிய பலரையும் அந்த டாக்டரிடம் சிகிச்சைக்குப் போகச் சொன்னார். அவர்களும் டாக்டரின் நேர்மையைக் கண்டு பலரிடம் சொல்ல, அவர் சீக்கிரமே அந்த நகரின் பிஸியான டாக்டர் ஆகிவிட்டார்.

வேலை, தொழில், வியாபாரம், பிசினஸ், வாழ்க்கை என்று எதிலுமே நேர்மையும் கச்சிதமும் எப்போதும் வளம் கொடுக்கும். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- ஒவ்வொரு நாளும் காலையில் பணியைத் தொடங்கும் முன்பு, உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளுங்கள். உங்கள் தோற்றம், செயல்பாடு, திறமை, எதையும் நேர்மறையான மனநிலையுடன் அணுகும் குணம் என்று எல்லாவற்றையும் மனதுக்குள் அசைபோட்டு, 'இன்றும் நான் திறமையாகவும் நேர்மையாகவும் என் பணிகளைச் செய்வேன்' என்று சொல்லிக்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உற்சாகம் கொடுக்கும்.
- உங்கள் பணியில் நேரிடும் பின்னடைவுகளுக்கும் பிரச்னைகளுக்கும் யாரையும் குறை சொல்லாதீர்கள். குடும்பத்தினர், சக ஊழியர்கள், மேலேயும் கீழேயும் இருப்பவர்கள், வாடிக்கையாளர்கள், போட்டியாளர்கள் என்று ஒவ்வொரு தவறுக்கும் யார் யாரையோ குறை சொல்ல ஆரம்பித்தால், அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும். 'இந்தத் தவறிலிருந்து நான் என்ன கற்றுக்கொண்டேன்' என்று மட்டும் யோசியுங்கள், வளம் பெறுவீர்கள்.





● இயலாமையும் ஏமாற்றமும் கோபமாக வெளிப்படும். இது இயல்பான உணர்வுதான் என்றாலும், கோபம் உங்களுக்கு நன்மையைத் தருவதில்லை. கோபத்தில் நீங்கள் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். மேலும் இது செரிமானக் கோளாறுகள், தூக்கப் பிரச்னைகள், இதய நோய் என்று பல பாதிப்புகளை ஏற்படுத்தும். 'கோபத்தைத் தவிருங்கள்' என்று சொல்வது சுலபம், செய்வது கடினம். தொடர் பயிற்சிகளால் இதைச் சாதிக்கலாம்.

● உங்களுக்கு அடுத்தவர்கள் செய்யும் தவறுகளை மன்னிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். மன்னிப்பின் மூலம் அடுத்தவர்களுக்கு மட்டுமின்றி, உங்களுக்கும் நீங்கள் நிம்மதியை வழங்குகிறீர்கள். 'இந்த அனுபவத்தின் மூலம் நான் கற்றுக்கொண்டது என்ன?' என்று மட்டும் யோசித்தால் மன அமைதி கிடைக்கும்.

● நெருங்கிய உறவினரோ, நண்பரோ உங்களிடம் பொய் சொன்னால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதை ஒரு நம்பிக்கை மோசடியாகத்தானே எடுத்துக்கொள்வீர்கள்! எனவே, நீங்கள் யாரிடமும் பொய் சொல்லாதீர்கள், நேர்மையற்று நடந்துகொள்ளாதீர்கள். உங்கள் சிந்தனையை, உணர்வுகளை, யோசனைகளை ஒளிவுமறைவின்றி நேர்மையாக வெளிப்படுத்துங்கள்.

● உங்களுடன் பழகியவர்களுக்கு மட்டுமின்றி, அறிமுகம் இல்லாத மனிதர்களுக்கும் உதவிகரமாக இருங்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்வதன் மூலமே ஒருவரின் நற்குணங்கள் செழுமை அடைகின்றன. இப்படி உதவி செய்து வாழும்போது, உங்களைப் பற்றிப் பெருமிதமான எண்ணம் உங்களுக்குள் ஏற்படும்.

● எங்கோ தொலைதூர நாட்டில் நிகழ்ந்த ஒரு துயரத்துக்காகப் பரிதாபப்படும் சிலர், தங்கள் தெருவில் ஓர் எளியவருக்கு நேர்ந்த இழப்புக்கு வருத்தப்பட மாட்டார்கள். ஆன்லைனில் யாரோ ஒருவர் சொல்லும் எமோஷனலான கதையைக் கேட்டு ஏதோ ஒரு பொருளை வாங்கும் பலர், தங்கள் தெருவில் கீரை விற்கும் மூதாட்டியின் நிலையைப் பார்த்து பரிதாபம் அடையமாட்டார்கள். இப்படி ஒருவராக நீங்கள் இருக்காதீர்கள். உங்களைச் சுற்றி நிகழும் எதிலும், ஆர்வத்துடன் பங்கெடுங்கள்.

● எந்தச் சூழலிலும், எப்படிப்பட்ட மனிதர்களிடமும் பணிவாகவும் கனிவாகவும் இருங்கள். அதற்காகப் பெரிதாக எதுவும் செலவாவதில்லை. எங்கோ ஒரு கடையில் நமக்காகக் கதவைத் திறந்துவிடும் ஒருவரிடம், 'நன்றி' என சொல்வதால் ஒன்றும் குறைந்துவிடாது. ஒரு ஹோட்டலில் உணவை ஆறிப்போய் கொண்டுவந்து கொடுக்கும் சிப்பந்தியிடம், நம் அதிருப்தியைச் சொல்லலாம். அதைக் கோபமாக வெளிப்படுத்துவது தேவையில்லை.

● உங்கள் ஊரில் நடப்பது முதல் உலக விஷயங்கள் வரை, முக்கியமான சம்பவங்கள் குறித்து அறிந்து வைத்திருங்கள். செய்தித்தாள் படிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது, இணையத்தில் செய்திகள் அறிவது என்று அறிவைச் சேகரியுங்கள். உலக நாடுகள் அனைத்துமே ஒன்றுடன் இன்னொன்று பிணைக்கப்பட்ட இந்தக் காலத்தில், எங்கோ ஒரு நாட்டில் நடக்கும் ஒரு சம்பவம், நம் ஊர் மார்க்கெட்டில் தாக்கம் ஏற்படுத்திவிடும். வளைகுடா நாடுகளில் பிரச்னை என்றால், உலகெங்கும் பெட்ரோல் விலை ஏறிவிடும். அதுபோன்ற எல்லா உலக நடப்புகளையும் அறிந்து வைத்திருப்பது வளம் தரும்.

● எப்படிப்பட்ட சூழலிலும் உங்கள் இயல்பைத் தொலைக்காதீர்கள். உங்கள் நம்பிக்கைகள், மதிப்பீடுகள், உங்கள் அடையாளம், செயல்பாடு என்று எதையும் மாற்றிக்கொள்ளாதீர்கள். நீங்கள் தவறு செய்வதாக உணர்ந்தால், அதை மாற்றுங்கள். மற்றபடி உங்களின் நேர்மையான செயல்பாடுகளே உங்கள் அடையாளம். எப்போதும் அடையாளம் இழக்காதீர்கள்.

● சூழலையும் மனிதர்களையும் மதித்து நடந்துகொள்ளுங்கள். பொது இடங்களில் செல்லும்போது, குப்பைத் தொட்டியைத் தவிர்த்து வேறு எங்காவது நீங்கள் குப்பையைப் போடுவீர்களா? நீங்கள் சுத்தமாக வைத்திருக்கும் அலுவலகத்தில் சேற்றுக் கால்களோடு ஒருவர் வந்து அழுக்காக்கினால் எரிச்சல் வரும் அல்லவா? இந்த எரிச்சலை யாருக்கும் நீங்கள் கொடுக்காதீர்கள். அதேபோல, அடுத்தவர்களின் கருத்துகள், பேச்சுகள், வாழ்க்கைமுறை, உணர்வுகள் என்று எதையும் கிண்டல் செய்யாதீர்கள். அவர்களுக்கு அப்படியெல்லாம் இருக்கும் சுதந்திரம் உண்டு என்பதை மதித்து நடந்துகொள்ளுங்கள்.

● உங்களைச் சுற்றி இருப்பவர்களை எப்போதும் ஆச்சர்யத்தில் ஆழ்த்துங்கள். ஒரு நல்ல நாளில் வாழ்த்துச் சொல்வது, அவர்களுக்கு எதிர்பாராத உதவிகள் செய்வது, பசியில் இருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பது, உடல்நலமில்லாத ஒருவருக்கு ஆறுதல் சொல்வது என்று உதவிகரமாக இருக்கும்போது உங்கள் வாழ்க்கையும் வளமாகும். ●



## வளம் தரும் வாழ்வுக்கான நெறிகள்!

- உங்களுக்கு இழைக்கப்பட்ட அவமானங்கள் எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். பழிவாங்குவதற்காக அல்ல, அதே தவறை நீங்கள் யாருக்கும் செய்யாமல் இருப்பதற்காக!
- யாரையும் ஏளனமாகப் பார்க்காதீர்கள். எளியவர்களிடம் கூட நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் ஏதாவது ஒன்று இருக்கும்.
- 'என்ன வாழ்க்கை இது' என்று விரக்தியாக நினைக்காதீர்கள். 'இந்த வாழ்க்கைக்கு என்ன குறை' என்று திருப்தியுடன் நினைத்து வாழுங்கள்.
- 'மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ' என்ற தயக்கத்தை ஒழித்துக் கட்டுங்கள். அது தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிவிடும்.
- சிறிய வாய்ப்புகள் என்றாலும் அவற்றைச் சிறப்பாகச் செய்து முடியுங்கள். பெரிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும்.
- உங்களைப் பிடிக்காமல் ஒருவர் விலகிச் செல்கிறார் என்றால் அமைதியாக ஒதுங்கிவிடுங்கள். உங்களைப் பிடித்த வேறு யாராவது நெருங்கி வருவார்கள்.

## எந்த நேரத்தைக் காட்டுகிறது?

ரயில் பயணத்தில் இரண்டு பேர் அடுத்தடுத்த இருக்கைகளில் அமர்ந்தார்கள். "நான் ரமேஷ்", "நான் செல்வன்" என்று பரஸ்பரம் அறிமுகம் செய்துகொண்டார்கள். ரமேஷ் தன் கையில் கட்டியிருந்த வாட்ச்சில் நேரம் பார்த்தார். அது மிக அழகாக இருந்தது. "வாட்ச் ரொம்ப நல்லா இருக்கே! என்ன விலை?" என்று செல்வன் கேட்டார்.

"ஒரு லட்ச ரூபாய். ஒரு வெளிநாட்டு நிறுவனத்தின் தயாரிப்பு. உலகத்திலேயே வெறும் 500 பேர் மட்டுமே இந்த மாடல் வாட்ச்சை வைத்திருக்கிறார்கள். அந்த 500 பேரில் நானும் ஒருவன்" என்றார் ரமேஷ்.

செல்வன் தன் கையில் இருந்த வாட்ச்சைக் காட்டி, "இது வெறும் ஆயிரம் ரூபாய் வாட்ச். லட்ச ரூபாய் வாட்ச்சும் இதுவும் ஒரே நேரத்தைத் தானே காட்டுகிறது" என்றார் கிண்டலாக.

"அப்படிச் சொல்ல முடியாது" என்று சிரித்த ரமேஷ் தொடர்ந்தார். "என் வாட்ச் என் நேரத்தைக் காட்டுகிறது. விலையுயர்ந்த வாட்ச்சை வாங்கிக் கட்டும் அளவுக்கு நான் வாழ்க்கையில் ஜெயித்திருக்கிறேன் என்பதைக் காட்டுகிறது. என்னைச் சந்திப்பவர்களின் பார்வையில் என்னை உயர்வாகக் காட்டுகிறது. எவ்வளவு பெரிய கூட்டத்திலும் எனக்கு மதிப்பு ஏற்படுத்தித் தருகிறது. உங்கள் வாட்ச் உங்கள் நேரத்தைக் காட்டுகிறது. விலையுயர்ந்த வாட்ச் கட்டும் அளவுக்கு நீங்கள் வாழ்க்கையில் முன்னேறாமல் இருக்கலாம். அல்லது உங்களை மதிப்புள்ளவராகக் காட்டும் அக்கறை இல்லாத அலட்சிய மனிதராக நீங்கள் இருக்கலாம்" என்றார் ரமேஷ்.

புரிந்துகொண்ட செல்வன் அமைதியானார்.



## அவர்கள் தந்த வளம்!

கல்லூரிப் படிப்பை முடித்து, வேலைக்குப் போய், சமீபத்தில் திருமணம் செய்துகொண்ட இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். தங்களுக்காகப் பெற்றோர்கள் என்னென்ன செய்தார்கள் என்பது குறித்துப் பேச்சு வந்தது. முதல் இளைஞன், "அவங்க எனக்காகப் பெரிசா ஒண்ணும் செய்யலை. என்னைப் படிக்க வச்சாங்க. கேட்ட வண்டியை வாங்கிக் கொடுத்தாங்க. எனக்குப் பொண்ணு பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சாங்க. இதெல்லாம் எல்லா அம்மா, அப்பாவும் செய்யறதுதானே" என்றான்.



அடுத்தவன் சொன்னான். "நான் விரும்பிய படிப்பைப் படிக்க வச்சாங்க. நான் கஷ்டப்படக்கூடாதுன்னு வண்டி வாங்கிக் கொடுத்தாங்க. பொருத்தமான பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சாங்க. என்னை வளமா வாழ வச்ச அவங்களுக்கு வாழ்நாள் முழுக்க நன்றிக்கடன் பட்டிருக்கேன்."

எதை எப்படிப் பார்க்கிறோம் என்பதில்தான் நம் பண்பு வெளிப்படுகிறது.



## வாழ்க்கை என்கிற வாத்தியார்!

ஒவ்வொரு மனிதருக்கும் வாழ்க்கையின் அர்த்தம் மாறும். வாழ்க்கை என்கிற பள்ளிக்கூடத்தில் நாம் அனைவரும் மாணவர்களாகவும் இருக்கிறோம், ஆசிரியர்களாகவும் இருக்கிறோம்.


பள்ளியிலோ, கல்லூரியிலோ கிடைக்காத அனுபவப் பாடங்களை இங்குதான் நாம் தினம் தினம் கற்றுக்கொள்கிறோம். இங்கு நமக்குப் பட்டம் கிடைப்பதில்லை. ஆனால், மரியாதை, பெருமை, வெற்றி எல்லாம் கிடைக்கிறது. ஏற்ற இறக்கங்களைத் தாண்டி எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக்கொள்கிறோம். வாழ்க்கையே நமக்குக் கிடைத்த சிறந்த வாத்தியார்.

## திட்ட வேண்டாம், திருத்துங்கள்!

முன்பெல்லாம் தெருமுனையில், பெட்டிக்கடையில், ஆட்டோ ஸ்டாண்டில் வழிகேட்டுப் பயணம் செய்தோம். அதனால், 'வாயில இருக்கு வழி' என்று பழமொழி சொல்வார்கள். இப்போது செல்போனில் கூகுள் மேப் போட்டு வழி பார்க்கிறோம். அதனால், 'கையில் இருக்கிறது வழி'!

கூகுள் மேப்பில் வழிபார்த்துப் பயணம் செய்யும்போது, ஒருவேளை அது சொல்லும் வழியை நாம் தவறவிட்டால் அது நம்மைக் கண்டிக்கவோ அல்லது திட்டவோ செய்யாது. "இந்த வலது பக்க ரோட்டில் போகச் சொன்னேனே, அதைக் கவனிக்காமல் நேராகப் போகிறாய், முட்டாள்! இப்போ ரெண்டு கிலோமீட்டர் சுற்றி வரணும். பெட்ரோலுக்கும் கேடு, பத்து நிமிஷம் லேட்டும் ஆகும்" என்று கத்துவதில்லை. அது உடனே, நீங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு மாற்று வழியைக் காண்பிக்கும். நீங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு வழிகாட்டுவதுதான் அதன் நோக்கம்; தவறுகளைச் சுட்டிக் காட்டி உங்களை வருத்தப்பட வைப்பது அல்ல.

இதன்மூலம் கூகுள் மேப் நமக்கு ஒரு வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தருகிறது. நமக்கு நெருக்கமாக இருப்பவர்கள் தவறு செய்தால், உடனே நாம் அவர்கள் மீது கோபத்தைக் காட்டுகிறோம். திட்டுவதால் எந்தப் பலனும் இல்லை. அவர்கள் தவறைத் திருத்திக்கொள்ள வழிகாட்டுவதே நல்லது. குடும்பத்தினர், நண்பர்கள், உறவுகள், சக பணியாளர்கள் அனைவருக்கும் சிறந்த கூகுள் மேப் போல இருங்கள். வாழ்க்கை வளம் பெறும்.



# எண்ணம் போலவே வாழ்க்கை வளம்!

**நாம் எப்படி நினைத்து வாழ்வின் ஒவ்வொரு சூழலையும் எதிர்கொள்கிறோமோ, அப்படியே இருக்கிறது நம் வாழ்க்கை. இந்த 10 விதிகளைப் பின்பற்றினால், எப்போதும் கவலை இருக்காது.**

- ‘இந்த நாள் இனிய நாள்’ என்று நாம் நினைத்தால், ஒவ்வொரு நாளும் இனிய நாளே! ‘இதுவே இனிமையான தருணம்’ என நாம் உணர்ந்தால், ஒவ்வொரு தருணமும் மறக்க முடியாததே! ‘இவர் நம் வாழ்வில் முக்கியமானவர்’ என நாம் பார்த்தால், சந்திக்கும் ஒவ்வொரு மனிதரும் முக்கியமானவரே!
- நம் இதயம் ஒரு வளமான நிலம். எதை விதைக்கிறோமோ, அது பல மடங்கு வளரும். வெறுப்பு, பயம், கோபம் போன்றவற்றை விதைக்காமல் மகிழ்ச்சி, அன்பு, நம்பிக்கையை விதைப்போம். வளம் பெறுவோம்.
- உங்கள் பேச்சை எல்லோரும் கேட்க விரும்பும் விதமாகப் பேசுங்கள். உங்களிடம் எல்லோரும் பேச விரும்பும் விதமாக, எதையும் காது கொடுத்துக் கேளுங்கள்.
- ‘இருள்’ என்று தனியாக எதுவும் இல்லை. வெளிச்சம் இல்லாத இடமே அப்படித் தெரிகிறது. ‘பிரச்னை’ என்று தனியாக எதுவும் இல்லை. நம்மிடம் தீர்வு இல்லாததால், அது அப்படித் தெரிகிறது.
- எவரைப் பற்றியும் அவசரத்தில் தீர்மானம் செய்யாதீர்கள். அது தவறாகவே முடியக்கூடும். சில மோசமான மனிதர்களைப் பற்றிக் கணிப்பதற்குத் தாமதம் செய்யாதீர்கள். தாமதிக்கப்பட்ட நீதி, உங்களுக்கே மறுக்கப்பட்ட நீதி ஆகிவிடும்.
- நிராகரிப்புகள், ஏமாற்றங்கள் வலி தரலாம். வாழ்வில் வலியையும் தாங்கிக்கொள்ளப் பழகுங்கள். வலியில் இருக்கும்போதுதான் நாம் பல விஷயங்களைக் கற்றுக்கொள்கிறோம்.
- ‘இவர் வந்தால்தான் என் வாழ்க்கை முழுமை அடையும்’ என எவரைக் குறித்தும் நினைக்காதீர்கள். அவர்கள் வராவிட்டால் வெறுமை சூழ்ந்துவிடும். உங்களை முழுமையாகப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளும் உறவுகளை மட்டுமே விரும்புங்கள்.
- நம் வாழ்வில் மகிழ்ச்சி என்பது, பெரும்பாலான நேரங்களில் நாம் தொலைத்துவிட்டதாக நினைத்துத் தேடும் டி.வி ரிமோட் போன்றதாகவே இருக்கிறது. சோபாவில் ரிமோட்டை வைத்துவிட்டு, அதன் மீதே உட்கார்ந்துகொண்டு வீடு முழுக்கத் தேடுவோம். அப்படித்தான் மகிழ்ச்சியை நமக்குள் பதுக்கி வைத்துவிட்டு வெளியில் தேடுகிறோம்.
- நேர்மையான மனிதர்கள் இருட்டுக்கும் பயப்படுவதில்லை, வெளிச்சத்தில் நிற்கவும் கூசுவதில்லை. எல்லாவற்றையும் ஒரேமாதிரிப் பார்க்க அவர்களால் முடியும். அவர்களை முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளுங்கள்.
- பொறாமை என்பது நல்ல மனிதர்களிடம் இருக்க வேண்டிய குணம் இல்லை. அது நமக்குத் தேவையான ஒரு கதவை மூடி, தேவையில்லாத பல கதவுகளைத் திறந்துவிட்டுக் குழப்பம் ஏற்படுத்திவிடும். ●



# வளமாக வாழவைக்கும் மருந்து!

**குட்டிப் பையன் ஒருவன் கையில் ஒரு ஜாடியுடன் அறைக்குள் நுழைந்தான். ஏதோ சமைத்துக்கொண்டிருந்த அம்மா, அதைப் பார்த்ததும் கோபமாகி விட்டார். “அது விலை உயர்ந்த ஜாடி. உடைத்துவிடப் போகிறாய். பத்திரமாக எடுத்துப் போய் வை” எனக் கண்டிப்புடன் சொன்னார்.**

பையன் சோகமாக இருந்தான். “அம்மா! என் கை இந்த ஜாடிக்குள் மாட்டிக்கொண்டது. வெளியில் எடுக்க முடியவில்லை. அதனால்தான் தூக்கிக்கொண்டு வந்தேன்” என்றான்.

அம்மா பதறிப்போய் அடுப்பை அணைத்துவிட்டு வந்தார். பையனின் கை மணிக்கட்டைத் தாண்டி அதற்குள் மாட்டிக் கொண்டிருந்தது. கை என்னவோ குட்டியாகத்தான் இருந்தது. ஜாடியின் குறுகிய வாய் வழியாக அது வெளியில் வரவில்லை. அம்மா இழுத்துப் பார்த்துவிட்டு அப்பாவை அழைத்தார்.

மகனின் கையில் தண்ணீரும் சோப்பும் தடவி நைஸாக உருவிப் பார்த்தார். பிறகு துடைத்துவிட்டு எண்ணெய் தடவி இழுத்துப் பார்த்தார். வலி தாங்க முடியாமல் பையன் கத்தினான்.

ஒன்றும் முடியவில்லை என்பதை உணர்ந்த அப்பா, பையனிடம் அன்பாகப் பேசினார். “நீதான் உன் முயற்சியில் எப்படியாவது கையை வெளியில் இழுக்க வேண்டும். அதைச் செய்தால், உனக்கு சாக்லேட் வாங்கிக்கொள்ள 100 ரூபாய் தருகிறேன்” என்றார்.

“உண்மையாகவா?” என்று பையன் ஆச்சர்யத்துடன் கேட்டான். அடுத்த நொடி அவன் கை வெளியில் வந்துவிட்டது. ஜாடிக்குள் ஏதோ சில்லறைகள் சிதறும் சத்தம் கேட்டது.

“என்ன அது?” என்று கேட்டார் அப்பா. “ஜாடிக்குள் கொஞ்சம் நாணயங்கள் இருந்தன. சாக்லேட் வாங்குவதற்காக அவற்றை எடுத்தேன். அப்போதுதான் கை சிக்கிக்கொண்டது. நீங்கள் தரும் 100 ரூபாய் அதைவிட அதிகம். அதனால் சில்லறைகளைப் போட்டுவிட்டேன்” என்றான் பையன்.

கைக்குள் நாணயங்களை இறுக்கமாக வைத்து மடக்கியிருந்ததால்தான், அவனால் கையை வெளியில் எடுக்க முடியவில்லை என்பது அப்பாவுக்குப் புரிந்தது.

வாழ்க்கையில் பலரும் இப்படித்தான் செய்கிறார்கள். ஒன்றுமில்லாத பிரச்னையில் வலிந்து போய் சிக்கிக்கொண்டு, கவலையும் சோகமும் கோபமும் கொள்கிறார்கள். தங்களால் இதிலிருந்து விடுபட முடியும் என்று தெரிந்திருந்தாலும், விலக மறுக்கிறார்கள். ‘நிறைவு’ என்ற உணர்வு இல்லாமல் போனால், இப்படித்தான் வாழ்க்கை இருக்கும்.

குளிர் காலத்தில் போர்வையைத் தேடும் இரவுகளில், ‘இந்த வெயிலே பரவாயில்லை. எவ்வளவு அடித்தாலும் தாங்கிக்கொள்ளலாம்’ என்று நினைப்பு எழும். கோடை வெயில் கொளுத்தும்போது மழைக்கு ஏங்குவார்கள். மழை நாட்களிலோ, அதன் ஈரத்தைச் சபிப்பார்கள்.

இப்படி இயற்கையின் பருவத்தை மட்டுமல்ல, தங்கள் பருவத்தையும் அதன் இயல்புகளுடன் பலரும் ஏற்றுக்கொள்வதில்லை. குழந்தையாக இருக்கும்போது, ‘வளர்ந்து பெரிதாகி, மதிப்பும் மரியாதையும் பெற வேண்டும்’ என ஏங்குவார்கள். வளர்ந்த பிறகோ, ‘குழந்தையாகவே இருந்திருக்கலாமே’ என்று கவிதை எழுதுவார்கள். இருபது வயதில், ‘எப்போது வேலைக்குப் போய், வீடு கட்டி, திருமணம் செய்து, வாழ்வில் செட்டில் ஆகப் போகிறோமோ’ என நினைப்பார்கள். நடுத்தர வயதைத் தாண்டும்போது, இழந்த இளமையை நினைத்து வருந்துவார்கள்.

கிடைத்ததில் நிறைவு பெறும் உணர்வே, இந்த எல்லாக் கவலைகளையும் துரத்தி வளமாக வாழவைக்கும் மருந்து!



# ஆரோக்கிய வாழ்வுக்கு அவசிய விதிகள்!

**கற்றுக்கொள்ளுங்கள்:** அன்றாட வாழ்வின் நெருக்கடிகளிலிருந்தும், பிரச்னைகளிலிருந்தும் உங்களை மீட்பது, கற்றல் மட்டும்தான். புத்தகம் படிப்பது மட்டுமே கற்றல் அல்ல! வாழ்க்கைத் தேவைக்கு, தொழிலுக்கு, வேலைக்கு என எல்லாவற்றுக்காகவும் எதையேனும் புதிதாகக் கற்கலாம். தேவையற்ற சிந்தனைகள் மற்றும் வம்புப் பேச்சுகளிலிருந்து இது காப்பாற்றும்.

**நன்றி சொல்லுங்கள்:** வாழ்க்கையில் உங்களுக்குக் கிடைத்த எல்லாவற்றுக்காகவும் நன்றியுடன் இருங்கள். வெறுமையின் விரக்தியுடன் காலையில் வேலைக்குக் கிளம்புவதைவிட, நிறைவின் திருப்தியுடன் தேடலில் இறங்குங்கள். 'அரை டம்ளர் காலியாக இருக்கிறது' என்ற எண்ணத்தைவிட, 'அரை டம்ளர் நிறைந்திருக்கிறது' என்ற எண்ணம்தான் ஊக்கம் தரும்.

**புன்னகை செய்யுங்கள்:** இயல்பான நேரங்களில் இது கஷ்டமில்லை. சிரித்து வைக்கலாம். ஆனால், பெரிய பிரச்னைகளை எதிர்கொள்ளும்போதும், துன்பங்களில் தவிக்கும்போதும் புன்னகை வருமா? அப்படிச் சிரித்தால் மன நோயாளி என்பார்களே! ஆனால், மனதை நலமாக வைத்திருக்க, புன்னகை அவசியம். அந்தச் சிரிப்புதான் மன அழுத்தத்தை விரட்டுகிறது.


**தனிமையில் இருக்காதீர்கள்:** உறவுகள், நண்பர்கள் மற்றும் சுற்றத்திடமிருந்து ஒதுங்கித் தனிமையில் இருக்காதீர்கள். விரும்பத்தகாத சிந்தனைகள் மனதில் எழும். எதிர்மறையாகப் பேசும் மனிதர்களுடனும் இருக்காதீர்கள். நேர்மறையாகப் பேசும், உற்சாகம் தரும், ஊக்கம் பெற வைக்கும் மனிதர்களுக்கு நெருக்கமாக இருங்கள்.

**நேரம் முக்கியம்:** 'நேரம் இல்லை' என்ற விஷயம்தான் நம்மைத் தினம் தினம் அதிகம் பதற்றம் கொள்ள வைக்கிறது. தினசரி வாழ்வில் எது அவசரம், எது முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டு செயல்பட்டால் பிரச்னை இல்லை. திட்டமிடல் முக்கியம். கடைசி நேரத்தில் எதையோ செய்து சமாளிக்க மட்டுமே பழகினால், எப்போதும் கொதிநிலையில் இருப்பீர்கள்.

**காலை உணவு அவசியம்:** நேரம் இல்லாதபோது நாம் முதலில் செய்வது, காலை உணவைச் சாப்பிடாமல் வெளியில் கிளம்புவதுதான். ஒருநாளின் மிக முக்கியமான உணவு அதுதான். அதைத் தவிர்ப்பது நம் உடல்நிலையையும் மனநிலையையும் பாதிக்கும். சரிவிகிதச் சத்துகள் நிறைந்த காலை உணவு சாப்பிடுவது அவசியம்.

**தண்ணீரைத் தவிர்க்காதீர்கள்:** நமக்குத் தண்ணீர் என்பது அமிர்தம் போல அவசியம். நம் உடலில் 60 சதவிகிதம் இருப்பது தண்ணீர்தான். உடலின் பெரும்பாலான உறுப்புகள் இயல்பாக இயங்குவதற்கும் தண்ணீர் தேவை. உடலில் சேரும் கழிவுகளை வெளியேற்றவும் அது தேவை. உடலில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டால், சோர்ந்துவிடுவீர்கள். எந்த வேலையும் செய்ய முடியாது.

**தேர்ந்தெடுத்துச் சாப்பிடுங்கள்:** சுவைக்கும் வாசனைக்கும் மயங்கியே நிறைய பேர் உணவுகளைச் சாப்பிடுகிறார்கள். உணவு என்பது நாக்கின் தேர்வாக இருக்கக்கூடாது; உடலின் தேர்வாக இருக்க வேண்டும்.



வைட்டமின்கள், மினரல்கள் என எல்லாமும் உணவால் கிடைக்க வேண்டும். காய்கறிகள், பழங்கள், தானியங்கள் என எல்லா வகை உணவுகளும் கலந்த, எல்லா நிறங்களும் இணைந்த உணவைத் தேர்வு செய்யுங்கள்.

**பற்களைப் பாதுகாத்திடுங்கள்:** இனிய வாழ்க்கைக்கும் பல்லுக்கும் என்ன தொடர்பு? பற்கள் ஆரோக்கியமாக இருந்தால்தான், சரியான உணவுமுறை, வாழ்க்கைமுறை என எல்லாவற்றையும் பின்பற்ற முடியும். இல்லாவிட்டால், பல்வலியே நம்மை முடக்கிவிடும். இப்போது பத்தில் நான்கு குழந்தைகளுக்கு எல்.கே.ஜி போவதற்குள் சொத்தைப்பல் வருகிறது. தினமும் இரண்டு வேளை பல் துலக்கி முறையாகப் பராமரிக்க வேண்டும்.

**நிம்மதியாகத் தூங்குங்கள்:** தூக்கமின்மைதான் பல உடல்நலக் கோளாறுகளுக்கு அடிப்படைக் காரணம். தூக்கத்தில் பற்றாக்குறை ஏற்பட்டால், மன அழுத்தமும் வரும். கோபம், துக்கம், எரிச்சல் போன்ற எதிர்மறை உணர்வுகள் அதிகம் ஏற்படும். தினமும் ஏழு மணி நேரத் தூக்கம், இனிமையான வாழ்வுக்கு உத்தரவாதம் தரும்.

**நடக்க மறக்காதீர்கள்:** எல்லோரும் சொல்லும் வழக்கமான ஆலோசனைதான். என்றாலும், இதன் அவசியத்தை உணர வேண்டும். தினமும் 20 நிமிடங்களாவது வியர்வை வழிய வேகநடை போடுவது, உங்களை ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மாற்றும். காலையில் வாக்கிங் மற்றும் உடற்பயிற்சிக்கு நீங்கள் செலவழிக்கும் நிமிடங்கள்தான், நாள்முழுக்க உங்களைத் துடிப்புடன் வைத்திருக்கும்.



## வெற்றியாளர்களிடம் என்ன இருக்கிறது?

- எப்படியாவது சாதிக்க வேண்டும் என்ற வேட்கை இருக்கிறது.
- வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியம் இருக்கிறது.
- இதில் ஜெயித்தே ஆக வேண்டும் என்ற வீம்பு இருக்கிறது.
- வாழ்வில் அடைவதற்கு என்று ஒரு லட்சியம் இருக்கிறது.
- அந்த லட்சியத்தை அடைவதில் ஒரு தீவிரம் இருக்கிறது.
- வாய்ப்பு எங்கே இருக்கிறது என்று தேடும் தாகம் இருக்கிறது.
- வாய்ப்புகளைத் தேடி உருவாக்கிக்கொள்ளும் திறமை இருக்கிறது.
- சலிக்காமல் நாள் முழுக்க உழைக்கும் எண்ணம் இருக்கிறது.
- தடைகளிலும் தோல்விகளிலும் தளராத மனம் இருக்கிறது.
- விழுந்தாலும் எழுந்து மீண்டும் நடக்கும் துணிவு இருக்கிறது.
- தங்கள் திறமைக்கு ஏற்ற இடம் எது என்ற தேடல் இருக்கிறது.
- சூழ்நிலைகளுக்கு ஏற்ப அனுசரித்துப்போகும் அடக்கம் இருக்கிறது.
- விமர்சனங்களை ஏற்றுக்கொண்டு மாறும் விவேகம் இருக்கிறது.
- அறிவு, திறமையை முழுமையாகப் பயன்படுத்தும் மூளை இருக்கிறது.
- இலக்குகளுக்காக மட்டுமே நேரத்தை ஒதுக்கும் அக்கறை இருக்கிறது.
- பொழுதுபோக்குகளில் நேரத்தை வீணடிக்காத பொறுப்பு இருக்கிறது.
- தங்கள் வளர்ச்சியை அடிக்கடி அளந்து பார்க்கும் ஆர்வம் இருக்கிறது.
- அத்தனைக்கும் அடித்தளமாக, உறுதியான தன்னம்பிக்கை இருக்கிறது.









# வேலையால் கிடைக்கும் வளம்!

புதிதாக வேலைக்குச் செல்பவரோ, ஏற்கனவே வேலையில் இருப்பவரோ, எவருக்குமே அந்த வேலைதான் வாழ்க்கைக்கான வளங்களைத் தருகிறது. இன்று பலரும் தங்களது வேலையில் போட்டிகளை எதிர்கொள்ளும் அளவுக்குத் திறமையை வளர்த்துக் கொள்கின்றனர். ஆனால் நிறுவனங்கள், வெறுமனே பணியாளர்களின் திறன்களை மட்டுமே பார்ப்பதில்லை. அவர்கள் நிறுவனத்தில் மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் வாடிக்கையாளர்களை அணுகுவதற்கும் தேவையான குணங்களையும் கொண்டுள்ளனரா என்று பார்க்கின்றனர். ஒருவரின் குணங்கள், நடத்தையில் வெளிப்படும். இந்த நடத்தை, பலருடனும் அவருக்கு நல்ல தொடர்பை ஏற்படுத்தும். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் உயர்வதற்கு இந்தக் குணங்களே உதவும்.

**எந்த வேலையையும் சிறப்பாகச் செய்து வாழ்வில் வளம் பெற இந்தப் பத்து மந்திரங்களைப் பின்பற்றுங்கள்:**

**ஆர்வம்:** எந்த நிறுவனத்திலும் நீங்கள் வேலைக்குச் சேரலாம். அந்த வேலையை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டு செய்ய வேண்டும். நிறுவனத்தின் விதிகளை முறையாகப் பின்பற்றுவதிலும் உங்களது ஆர்வம் பிரதிபலிக்க வேண்டும். விதிகளைப் பின்பற்ற சலித்துக்கொள்பவர்களை நிறுவனங்கள் விரும்புவதில்லை. குறிப்பிட்ட இலக்கை அடைய அர்ப்பணிப்புடன் இயங்குவது, புதிய சவால்களை அடைய தனது அறிவை வளர்த்துக் கொள்வது, வலிமையான நம்பிக்கை சார்ந்த உறவுகளை உருவாக்கும் தன்மை ஆகியவை இன்றைய நிறுவனங்களின் எதிர்பார்ப்புகளாக உள்ளன.

**பணி நெறிமுறை:** மேலதிகாரிகள் பார்க்கும்போது மட்டுமே சிலர் பொறுப்பாக வேலை செய்வார்கள். மற்ற நேரங்களில் அலட்சியமாக இருப்பார்கள். இவர்களை நிறுவனங்கள் விரும்பாது. வயது, அனுபவம், திறமை ஆகியவற்றைத் தாண்டி, பணி நெறிமுறைகளே ஒருவருக்கு நல்ல அடையாளம் தரும். இயல்பிலேயே சிறந்த

பணியாளர்கள் மற்றவர்கள் பொறாமைப்படும் அளவுக்கு நேர்த்தியாகத் தங்கள் பணிகளைச் செய்வார்கள். சரியான நேரத்தில் வேலையை முடிப்பார்கள். நம்பிப் பொறுப்புகளைக் கொடுக்கும் அளவுக்குத் திறமை காட்டுவார்கள். நிறுவனங்கள் பாராட்டி ஊக்கப்படுத்தும் அளவுக்குக் கூடுதல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவார்கள். இப்படிப்பட்டவர்களைக் கண்காணிக்கக் குறைந்த அளவு நிர்வாகம் மட்டுமே தேவைப்படும். அனைத்துப் படிநிலைகளிலும் பணி நெறிமுறைகளைச் சரியாகப் பின்பற்றும்போது வேலைகள் எளிதில் முடியும்.

**நேர்மை:** பணிச்சூழலைச் சீர்குலைக்காமல் தங்களது கருத்துகள், யோசனைகள் மற்றும் ஏமாற்றங்களை நேர்மையான ஊழியர்கள் வெளிப்படுத்துவார்கள். இவர்களிடமே நிறுவனங்கள் அனைத்துப் பொறுப்புகளையும் ஒப்படைக்கின்றன. சில நேரங்களில் அதிக பொறுப்புகளை அளிக்கும்போதும் இவர்கள் சோர்வின்றிப் பணியாற்றுகின்றனர். நிறுவனத்தின் எந்த இடத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும், அவர்கள் அந்த இடத்துக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராக உள்ளனர். நேர்மையான ஊழியர்கள் அந்த நிறுவனத்தின் நலம் விரும்பியாகக் கொண்டாடப்படுகின்றனர்.

**நம்பிக்கை:** 'இவரிடம் ஒரு பணியை ஒப்படைத்தால் அதைக் கண்டிப்பாக முடித்துவிடுவார்' என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இன்றைய சூழலில் ஒரு நிறுவனத்தில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் மட்டுமே நம்பிக்கைக்கு உரியவர்களாக உள்ளனர். இவர்களால் முதலாளிகள் பயனடைகின்றனர். நிதி நிர்வாகம் செய்யவும், வாடிக்கையாளர்களைத் தொடர்புகொள்ளவும் நம்பிக்கையான ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். மற்ற ஊழியர்களுக்கு இவர்கள் சிறந்த முன்மாதிரியாக உருவாகின்றனர். உடன் வேலை செய்பவர்களையும் ஊக்குவித்துத் திறம்படப் பணியாற்ற வைக்கின்றனர்.

**லட்சியம்:** சம்பளத்துக்காக மட்டுமே வேலை பார்ப்பவர்கள் உயர முடியாது. தங்களை வளர்த்துக்கொள்ளாமல் ஒரே நிலையிலேயே இருப்பார்கள். பெரும்பாலும் இவர்கள் ஏதாவது குறை கூறிக்கொண்டே இருப்பார்கள். ஆனால் லட்சியத்துடன் பணியாற்றுபவர்கள், தங்களைச் சுற்றியுள்ள குறைகளைக் கண்டுகொள்ளாமல் தன்னை மேம்படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றனர். இவர்கள் வேலை செய்யும் இடத்தில் புதுமைகளை அறிமுகம் செய்வது, வித்தியாசமாக யோசிப்பது என அக்கறை காட்டுகின்றனர். இதுபோன்ற ஊழியர்களையே நிறுவனங்கள் தக்க வைத்துக்கொள்ள விரும்புகின்றன. நிறுவனத்தின் வளர்ச்சியில் இவர்களின் பங்கு முக்கியமானது.

**டீம் லீடர்:** வணிகத்தை மேம்பட வைப்பதில், குழுச் செயல்பாடு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஊழியர்கள் அந்தக் குழுவுக்குள் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது, அவரவர் வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டியது அவசியம். சிறந்த அணித்தலைவரே குழுவை வெற்றிகரமாக இயங்க வைப்பார். எல்லோருடனும் இணக்கமாக இயங்க முடியாதவர்கள் குழுவின் தலைவர் ஆக முடியாது. தன்னையும் உயர்த்திக்கொண்டு, தன்னைச் சார்ந்துள்ள ஊழியர்களையும் திறம்படப் பணியாற்ற வைப்பதில் கவனம் செலுத்துபவர்கள் சிறந்த டீம் லீடர்கள். தலைமைப் பண்புகளை மேம்படுத்திக்கொள்வது, நிறுவனத்தில் உங்கள் இடத்தை உறுதிப்படுத்தும்.

**விமர்சனச் சிந்தனையாளர்:** எந்த விஷயத்தையும் விமர்சன ரீதியாகச் சிந்திப்பவர்கள், சிக்கல்களைத் தர்க்கரீதியாக அணுகி அதற்கான தீர்வைக் காண்கின்றனர். இவர்கள் ஒரு பிரச்னையைப் பலவிதமான கண்ணோட்டங்களில் பார்க்கின்றனர். அதன் சாதக, பாதகங்களைப் பலவிதமாக யோசித்துப் பார்த்து, சிறந்த தீர்வைத் தேர்வு செய்கின்றனர். இவர்களே நெருக்கடியான நேரங்களில் முடிவெடுக்க உதவுகின்றனர். வணிகத்தின் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காண இவர்கள் உதவுகின்றனர்.

**செயல்திறன்:** பேசுவதை விடச் செயல்படுவது முக்கியம். முன்முயற்சிகள் மற்றும் தலைமைத்துவப் பண்பு உள்ளவர்கள், திட்டமிட்டுச் செயல்படுவதுடன் தங்களது செயல்திறனை மேம்படுத்திக் கொள்வதிலும் ஆர்வமாக உள்ளனர். இவர்களால்தான் நிறுவனங்கள் அடுத்தகட்ட வளர்ச்சி காண்கின்றன.

**தகவல்தொடர்புத் திறன்:** சிறந்த ஊழியரின் முக்கியமான குணங்களில் ஒன்றாகத் தகவல் தொடர்புத் திறன் உள்ளது. வெறுமனே பேசுவது மட்டும் தகவல்தொடர்பு அல்ல! எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது, எப்போது பேச வேண்டும், எப்போது பேசாமல் இருக்க வேண்டும் என அறிந்திருப்பதும் தகவல்தொடர்புதான். நிறுவனத்தின் மேலாளர், குழு உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளருடன் திறம்படத் தொடர்பு கொள்பவர்கள், நிறுவனம் சிறப்பாக இயங்க உதவுகின்றனர். மேலதிகாரி சொல்வதில் எதையெல்லாம் ஊழியர்களுக்குச் சொல்ல வேண்டும், அதை எப்படிச் சொல்ல வேண்டும், வாடிக்கையாளர்களை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதையெல்லாம் வளர்த்துக் கொள்வது அவசியம்.

**பொறுப்புணர்வு:** தனது பணி மற்றும் செயல்கள் மற்றும் முடிவுகளுக்குப் பொறுப்பேற்பவர்களை நம்பகத்தன்மையுடன் நிறுவனங்கள் அணுகுகின்றன. இவர்கள் சிறந்த ஊழியர்களை உருவாக்குகின்றனர். இந்த நம்பகத்தன்மையால் அவர்கள் லட்சிய ஊழியர்களாகக் கொண்டாடப்படுகின்றனர். இதுபோன்ற திறன்களை வளர்த்துக்கொள்வதால் எந்த நிறுவனத்திலும் மதிப்பு மிக்க பயணத்தை நீங்கள் தொடர முடியும். அதன்மூலம் வாழ்வில் நிறைவான வளங்களையும் பெற முடியும். ●

# மனதில் இருக்கிறது வளம்!

கண்ணன் நடத்தும் காபி கடையில் காலையிலிருந்து நிறைய கூட்டம். வீட்டிலிருந்து வரும்போதே அவருக்கு லேசான தலைவலி இருந்தது. வரும் எல்லோருக்கும் டீ, காபி போட்டுக் கொடுத்து, பணத்தை வாங்கிக் கல்லாவில் போட்டுப் பரபரப்பாக இருந்ததில் அவருக்குத் தலைவலி அவ்வளவாகத் தெரியவில்லை.

மாலை கூட்டம் கொஞ்சம் குறையவே, உதவியாளரைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு அவர் நிதானமாக உட்கார்ந்தார். தலைவலி மண்டையைப் பிளந்தது. 'ஒரு மாத்திரை போட்டால்தான் குறையும்' என நினைத்தார். சற்று தூரத்தில் நண்பர் குமாரின் மருந்துக்கடை இருக்கிறது. அங்கு போனார்.

கடையில் குமார் இல்லை. அங்கு இருந்த பெண்ணிடம் மருந்து வாங்கி போட்டுக்கொண்டு தண்ணீர் குடித்தார். ''குமார் எங்கே?'' என விசாரித்தார். ''அவருக்குக் காலையிலிருந்து கடுமையான தலைவலி. ஒரு காபி குடித்தால்தான் தலைவலி குறையும் என உங்கள் கடைக்குத்தான் கிளம்பிப் போனார்'' என்றார் கடைப்பெண்.

காபி விற்பவர், தன் தலைவலிக்கு மருந்தில்தான் நிவாரணம் தேடுகிறார். மருந்துக் கடைக்காரருக்கு காபியே மருந்தாகத் தெரிகிறது. அமைதி, நிம்மதி, மகிழ்ச்சி, நிறைவு என நம்மிடமே எல்லாம் இருப்பதை உணராமல், வெளியில் தீர்வு தேடுகிறார்கள் பலரும்! இதுதான் மனிதர்கள் செய்யும் விநோதம்.

மனதுக்குள் நிறைந்திருப்பதை உணர்ந்தால், வாழ்வில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலைத்து வளம் கிடைக்கும்.

# மகனுக்கு அது தெரியும்!

ஒருவர் தன் எட்டு வயது மகனுடன் சர்க்கஸ் பார்க்கச் சென்றார். டிக்கெட் வழங்குபவர், "ஏழு வயது மற்றும் ஏழு வயதுக்கும் குறைவானவர்களுக்கு அரை டிக்கெட்" என்றார். அந்தத் தந்தை இரண்டு முழு டிக்கெட் கேட்டார்.

டிக்கெட் வழங்குபவர் அந்தச் சிறுவனைப் பார்த்துவிட்டு, "உங்கள் மகனுக்கு என்ன வயது?" என்று கேட்டார். "எட்டு வயது" என்றார் அந்தத் தந்தை. உடனே டிக்கெட் வழங்குபவர், "உங்கள் பையனைப் பார்க்க எட்டு வயது போல் தெரியவில்லை. நீங்கள் ஏழு வயது என்று சொல்லியிருந்தால்கூட நான் நம்பியிருப்பேன். அரை டிக்கெட் கொடுத்திருப்பேன்" என்றார்.

அதற்கு அந்தத் தந்தை, "நான் ஏழு வயது என்று பொய் சொன்னால் உங்களுக்குத் தெரியாது. ஆனால், ஒரு டிக்கெட்டுக்காக நான் பொய் சொல்கிறேன் என்று என் மகனுக்குத் தெரியும்" என்றார்.

பிள்ளைகள் நம்மைப் பார்த்தே வளர்கிறார்கள்; நம்மைப் போலவே வளர்கிறார்கள். மாமனிதர்களாக இருக்க முடியாவிட்டாலும், சின்னச்சின்ன விஷயங்களுக்காகப் பொய் சொல்லாத நல்ல மனிதராக இருக்க முடியும் அல்லவா? உயர்ந்த எண்ணங்கள்தான் உயர்ந்த மனிதர்களை உருவாக்குகின்றன.




# உணர்ந்து கற்றால் வளம் கிடைக்கும்!

ஆசிரியர் ஒருவர் தன் வகுப்பிலிருக்கும் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரித்தார். முதல் குழுவினரிடம், "பானை செய்வது எப்படி, அதன் வடிவமைப்பு, அதற்கான திட்டமிடல் என்று எல்லாவற்றையும் புத்தகங்களில் படித்து வையுங்கள். கச்சிதமான பானையை உருவாக்குவது எப்படி என்றும் படியுங்கள். அதன்பின் ஒவ்வொருவரும் ஒரு அழகிய பானையைச் செய்யுங்கள். அதுவே உங்களுக்கான தேர்வு" என்றார்.

இரண்டாவது குழுவினரை அழைத்து, "நீங்கள் களிமண்ணைப் பிசைந்து பானைகள் செய்து பழகுங்கள். செய்யச் செய்ய உங்களுக்கு நேர்த்தி வருகிறதா என்று பார்ப்போம். கடைசியில், ஒவ்வொருவரும் செய்ததில் அழகிய பானை ஒன்றை எடுத்துவாருங்கள். அதுவே உங்களுக்குத் தேர்வு" என்றார்.





அன்றே முதல் குழு புத்தகங்கள் படித்து, பானை பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டது. நீண்ட நாட்கள் ஆராய்ச்சி செய்து ஒவ்வொருவரும் ஒரு பானை செய்தனர்.

இரண்டாவது குழு களிமண்ணைப் பிசைந்து பிசைந்து பானை செய்து பழகியது. கைகள் வலித்தன, உடல் முழுக்க அழுக்கானது. ஆரம்பத்தில் தடுமாறினாலும், சீக்கிரமே கற்றுக்கொண்டனர். சிறிதாகவும் பெரிதாகவும் நிறைய பானைகள் செய்தனர்.

கடைசியில் தேர்வு நடந்தது. படித்து, ஆராய்ச்சி செய்து பானைகளை உருவாக்கிய முதல் குழுவைவிட, செய்து பழகிய இரண்டாவது குழுவே அழகிய பானைகளுடன் வந்திருந்தது. வாழ்க்கையில் பழகி, உணர்ந்து கற்றால் வளம் கிடைக்கும்.

## பெருமை பேச வேண்டாம்!

புகழ்பெற்ற எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் ஒருநாள் பூங்காவில் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு ஒரு சிறுமி பந்துடன் வந்தாள். தன்னுடன் விளையாட யாருமில்லை என்பதை உணர்ந்த அவள் டால்ஸ்டாய் அருகே வந்தாள். “என்னோடு விளையாட வருகிறீர்களா?” என்று கேட்டாள். அவரும் எழுந்து சென்று அந்தச் சிறுமியுடன் சிறிது நேரம் விளையாடினார். இருட்டத் தொடங்கியதும் அந்தச் சிறுமி, “நான் போய்வருகிறேன்” என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

தான் மாபெரும் எழுத்தாளர் என்பதை உணர்த்த விரும்பிய டால்ஸ்டாய், “நான் யாரென்று தெரியுமா?” என்று கேட்டார். “தெரியுமே! நீங்கள் ஒரு தாத்தா” என்றாள் சிறுமி.

‘‘வீட்டுக்குப் போனதும் உன் அம்மாவிடம், ‘இன்று பூங்காவில் டால்ஸ்டாயுடன் விளையாடினேன்’ என்று சொல். அவர் சந்தோஷப்படுவார்” என்றார். அந்தச் சிறுமியும் இயல்பாக, “நீங்களும் உங்கள் அம்மாவிடம் போய், ‘மேரியுடன் விளையாடினேன்’ என்று சொல்லுங்கள். உங்கள் அம்மா சந்தோஷப்படுவார்’’ என்றாள்.


இதைக் கேட்டதும் தன் கர்வத்துக்காக டால்ஸ்டாய் வெட்கப்பட்டார்.



# வாழ்வில் வளம் தரும் 16 குணங்கள்!



- நம்மை நேசிக்கும், நமக்காக எதையும் செய்யும் மனிதர்களை அலட்சியமாகக் கையாளாதீர்கள். அவர்களிடம் அன்பும் நன்றியும் காட்டுங்கள்.
- அறிமுகம் இல்லாத எவரையும் தோற்றத்தை வைத்து மதிப்பிடாதீர்கள். தோற்றம் எவரையும் ஏமாற்றும். பழகிப் பார்த்துப் பண்புகளை அறியுங்கள்.
- உங்களுக்குத் தகுதியான ஒன்றைவிடக் குறைவாகக் கிடைக்கும் எதிலும் 'போதும்' என நிறைவடைந்து விடாதீர்கள். அடுத்த கட்டம் என்ன என்பதே தேடலாக இருக்கட்டும்.
- உங்களுக்குள் நீங்களே எதிர்மறையாகப் பேசிக்கொள்ளாதீர்கள். அப்படிப் பேசிக்கொள்வதை நீங்கள் நம்பத் தொடங்கிவிட்டால், உங்களுக்குத்தான் பிரச்னை.
- குழந்தைகள் எதிரில் எந்த ரகசியத்தையும் பேசாதீர்கள். தேவையற்ற இடங்களில் அதை அவர்கள் வெளிப்படுத்தி தர்மசங்கடம் ஏற்படுத்துவார்கள்.
- எவரையும் சந்தோஷப்படுத்துவதற்காகப் பொய் சொல்லாதீர்கள். அதேபோல அவர்களைக் காயப்படுத்தும் உண்மையையும் சொல்லிவிடாதீர்கள். தேவையற்ற வலிகளைத் தவிர்த்துவிடலாம்.
- 'இதில் நமக்கு முன்னேற்றம் கிடைக்கும்' என்று நினைக்கும் எந்தச் செயலையும் தோல்வியில் சோர்ந்துபோய் நிறுத்திவிடாதீர்கள். உங்களுக்கான நேரம் வரும்.
- உங்களை ஒன்றுக்கும் மதிப்பில்லாதவர்கள் போல அலட்சியம் செய்யும் மனிதர்களிடம் நேரத்தை வீணடிக்காதீர்கள். உங்கள் மதிப்பு உங்களுக்குத் தெரிந்தால் போதும்.
- யாரிடமும் அன்பு காட்டுவது போலப் போலியாக நடிக்காதீர்கள். எதிர்காலத்தில் அது ஏராளமான பிரச்னைகளைக் கொண்டுவந்துவிடும். உங்கள் இயல்பில் இருங்கள்.
- வாழ்வின் கடினமான தருணங்களில் துணைநின்ற உறவுகளையும், தோள் கொடுத்த நண்பர்களையும் எப்போதும் மறக்காதீர்கள். அவர்களே உங்களுக்கான ஊக்க சக்தி.
- எல்லா நேரங்களிலும் எல்லா வேலைகளுக்காகவும் யார் யாரையோ சார்ந்திருக்காதீர்கள். நீங்களே முன்னுரிமை கொடுத்து முடிக்கப் பாருங்கள்.
- மனிதர்களில் உயர்வு, தாழ்வு பார்க்காதீர்கள். எல்லோரையும் எந்த வித்தியாசமும் இல்லாமல் சமமாக நடத்துங்கள்.
- ஒரு நல்ல விஷயம் செய்ததற்காக எப்போதும் வருந்தாதீர்கள். அதை யாரும் மதிக்காமல் போகலாம். பாராட்டாமல் போகலாம். ஆனால், அது மதிப்புள்ள செயல்.
- பணம், முயற்சி, உணர்வுகள், உழைப்பு என்று எதையும் முழுதாக ஒரே இடத்தில் போடாதீர்கள். பலன் இல்லாமல் போனால், பெரிய ஏமாற்றத்தை அனுபவிக்க நேரிடும்.
- உங்கள் தேவைகளை மதிக்காமல் இருக்காதீர்கள். களைப்பாக இருந்தால் ஓய்வெடுங்கள், உடல்நலம் குன்றினால் சிகிச்சை எடுங்கள், மனத்தில் எதிர்மறை உணர்வுகள் வந்தால் மன அமைதி தேடுங்கள்.
- 'இதை என்னால் எப்போதும் செய்ய முடியாது' என்று எதிலும் பின்வாங்காதீர்கள். சூழல்கள் மாறலாம், நீங்களும் மாறலாம், வாழ்க்கை மாறலாம். அப்போது அதைச் செய்ய நேரிடலாம். எனவே, இந்தக் கணத்தில் செய்வதைப் பற்றி மட்டுமே முடிவெடுங்கள். ●


RAMRAJ
ACHARYA®
PANCHAKACHAM DHOTIS • KURTA
True Spiritual
Strength Reflected
In Simplicity
Available at Ramraj Showrooms And All Leading Textile Shops



RAMRAJ
mrithu
TOWELS
SOFT LIKE
Foam
MRITHU PREMIUM
BATH TOWELS
STORE LOCATION
BAMBOO TOWELS
SIGNATURE TOWELS
TERRY TOWELS
STRIPED & CHECKERED TOWELS
SUPER SOFT & SUPER ABSORBENT
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops


Kokhila®
WOMEN'S INNERWEARS
BY
RAMRAJ


RAMRAJ ©
LITTLE STARS ®
KIDS DHOTIS • SHIRTS

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**
**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். VENMAII என்ற பெயரில் செக்/ டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

வெண்மை
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

# உங்களைப் பணக்காரர் ஆக்கும் வளமான வழிகள்!



"கணேஷ், உன்கிட்ட 500 ரூபாய் இருக்கு, உங்க அப்பாகிட்ட 500 ரூபாய் கேட்கிறாய். அப்போ உன்கிட்ட மொத்தமா எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டார் கணித ஆசிரியர். கணேஷ் ஒரு நொடிகூட யோசிக்காமல், "500 ரூபாய் இருக்கும் சார்" என்றான். கணித ஆசிரியர் கோபமாகி, "உனக்குக் கணக்கு தெரியலை" என்றார். கணேஷ் நிதானமாக, "எனக்குக் கணக்குத் தெரியும் சார். உங்களுக்குதான் எங்க அப்பாவைப் பற்றித் தெரியலை. அவர் பணம் தர மாட்டார்" என்றான்.

நிறைய பணம் சம்பாதிப்பவர் பணக்காரர் ஆவதில்லை. பணத்தை எப்படி முதலீடு செய்வது, எப்படிச் சேமிப்பது, எப்படிச் செலவழிப்பது என்று கற்றுக்கொள்பவரே பணக்காரர் ஆகிறார். அப்படி உங்களைப் பணக்காரர் ஆக்கும் வளமான சில வழிகள் இங்கே...

**நிச்சயமின்மையை எதிர்பாருங்கள்:** ஒரு வேலையை விட்டுவிட்டுப் புது வேலையில் சேரும்போதோ, ஒரு புதிய இடத்துக்கு மாறுதலாகிச் செல்லும்போதோ, அது வளமான வாய்ப்பா, அல்லது ஆபத்தா என்பது தெரியாது. ஆனாலும் மனிதர்கள் ரிஸ்க் எடுக்கிறார்கள். ஒருவர் எவ்வளவு ரிஸ்க் எடுக்கிறாரோ, அந்த அளவுக்குப் பெரிய பலன் கிடைக்கும். பணம் சார்ந்த முதலீடுகளும் இப்படிப்பட்டதுதான். 'இந்தப் புறநகர்ப் பகுதி எதிர்காலத்தில் வளர்ச்சி அடையும்' எனத் துணிந்து ரிஸ்க் எடுத்து நிலம் வாங்கிப் போடுகிறவர்தான் பல மடங்கு லாபம் அடைகிறார். 'பங்குச்சந்தையில் இந்த நிறுவனப் பங்கு லாபம் சம்பாதித்துத் தரும்' என நம்புகிறவர் நன்கு சம்பாதிக்கிறார். ஆனால், இதற்கெல்லாம் அனுபவமும் ஞானமும் சேகரிக்க வேண்டும் என்பதும் முக்கியம். பாதுகாப்பான திட்டங்களில் பாதியளவு முதலீடு செய்யுங்கள், மீதியில் இப்படி ரிஸ்க் எடுங்கள். குடும்பப் பொறுப்புகள் வந்த பிறகு ரிஸ்க் எடுப்பதைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

**தெளிவாகத் திட்டமிடுங்கள்:** நிறைய பேர் பண விஷயத்தில் பகல் கனவு கண்டு, கற்பனைக் கோட்டைகளைக் கட்டுகிறார்கள். இங்கே இப்படிப் பணத்தைப் போட்டால், அது இத்தனை ஆண்டுகளில் இவ்வளவு மடங்காக உயர்ந்துவிடும் என்று ஆசைப்படுகிறார்கள். அப்படி நடக்காவிட்டால் சோர்ந்து போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள்தான் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, தவறான நபர்களிடம் பணத்தை முதலீடு செய்து ஏமாறுகிறார்கள். பண விஷயத்தில் ஆசைப்படும் மனிதர்களைவிட, தெளிவாகத் திட்டமிடும் மனிதர்களே வளம் பெறுகிறார்கள். நிலத்தில் இவ்வளவு, தங்கத்தில் இவ்வளவு, அதிக வட்டி தரும் அரசு சேமிப்புத் திட்டங்களில்

இவ்வளவு என்று பிரித்து முதலீடு செய்பவர்களுக்கு, தங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பது தெளிவாகத் தெரியும்.

**வளைந்து கொடுங்கள்:** 'நாம் வசதியாகப் பயணம் செய்வதற்கு கார் வாங்க வேண்டும்' என்று ஒருவர் போவார். அவர் தான் விரும்பும் விலையில், ஏதோ ஒரு பிராண்டில் அவருக்கு வசதிப்படும் காரை வாங்கிவிட முடியும். ஆனால், 'எனக்கு இந்த நிறத்தில், இப்படி உள் வடிவமைப்புகள் கொண்ட, இந்த இந்த வசதிகள் கூடிய, இவ்வளவு மைலேஜ் தரக்கூடிய கார் வேண்டும்' என்று போகிற இன்னொருவருக்கு அப்படி அமையாது. அவருக்கு சாய்ஸ்களும் குறைவாகிவிடும், விலையும் அதிகம் தர வேண்டும். வாழ்க்கையில் சில விஷயங்களில் வளைந்துகொடுத்துப் போகிறவர்களுக்கு வாய்ப்புகள் நிறைய வரும். முதலீடு விஷயத்தில் வளைந்து கொடுங்கள். வாய்ப்புகளுக்கு ஏற்றபடி முதலீடுகளை அதிகமாகவோ, குறைவாகவோ செய்யுங்கள்.

**சின்ன விஷயமும் பலன் தரும்:** வாழ்க்கையில் நாம் செய்யும் சின்னச் சின்ன முயற்சிகளும்கூட, எதிர்பாராத நேரத்தில் பலன் தரும். இளம் வயதில் நேரம் இருக்கிறதே என ஜெர்மன் மொழி கற்கும் ஒருவர், எதிர்காலத்தில் ஐ.டி படிப்பு முடித்துவிட்டு அந்த மொழித் தகுதியை வைத்து ஜெர்மனிக்கு வேலைக்குப் போய்விட முடியும். பண நிர்வாகத்திலும் சின்ன விஷயங்கள் பெரிய பலன்களைத் தரும். ஒருவர் வேலையில் சேர ஆரம்பித்ததும் பி.எஃப் பணம் சேமிப்பார். சிறுகச்சிறுகச் சேமிக்கும் பணம், வட்டிக்கு வட்டி போட்டு ஆண்டுதோறும் பெருகி, சில ஆண்டுகளில் பல லட்சங்களாக ஆகிவிடும். இதேபோலச் சேமிப்புத் திட்டங்கள் பலவற்றில் கிடைக்கும் கூட்டுவட்டியின் பலன் அபாரமானது. எனவே, சின்ன சேமிப்புகளை அலட்சியம் செய்யாதீர்கள்.

**கட்டுப்படுத்த நினைக்காதீர்கள்:** பங்குச்சந்தையில் நான் வாங்கிய ஷேரின் மதிப்பு உயர வேண்டும், நான் முதலீடு போட்டுத் தொடங்கிய வியாபாரம் கொழுத்த லாபம் தர வேண்டும் என்றெல்லாம் கண்மூடித்தனமாக நினைக்கக்கூடாது. வாழ்வில் பல விஷயங்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்காது. நான் முதலீடு செய்த நிலத்தின் விலை ஏற வேண்டும் என நீங்கள் நினைத்தால், அது ஏறிவிடாது. அதற்குப் பல விஷயங்கள் சாதகமாக நிகழ வேண்டும். அங்கு நிறைய பேர் வீடு கட்ட வேண்டும். நல்ல போக்குவரத்து வசதிகள் வேண்டும். பஸ் ஸ்டாண்ட், கல்லூரி, பள்ளிகள் என உருவாக வேண்டும். எனவே, நன்கு அலசிப் பார்த்து முதலீடுகள் தொடர்பாக முடிவெடுங்கள். ஒரே இடத்தில் எல்லா முதலீடுகளையும் செய்துவிடாதீர்கள்.

**எல்லாவற்றையும் கேட்காதீர்கள்:** நம் ஊரில் இலவசமாகக் கிடைப்பது அறிவுரை மட்டும்தான். உறவினர்கள், நண்பர்கள் வட்டத்தில் நிறைய பேர் யோசனைகள் சொல்வார்கள். அலுவலகத்தில் பலர் ஐடியாக்கள் சொல்வார்கள். சமூக வலைதளங்களைத் திறந்தால், முதலீடு ஆலோசனைகள் கொட்டிக் கிடக்கின்றன. 'இதில் முதலீடு செய்யாவிட்டால் நீங்கள் கோடீஸ்வரர் ஆகும் வாய்ப்பை இழந்துவிடுவீர்கள்' என்றெல்லாம் தூண்டில் போடும் மனிதர்கள் உண்டு. எதையும் கேட்காதீர்கள். உங்கள் உள்ளுணர்வு சொல்வதைக் கேளுங்கள். ஸ்மார்ட் முதலீட்டாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்து, அதைப் பின்பற்றுங்கள். ●


ராம்ராஜ் காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 10 இதழ் 3

செப்டம்பர் 2025

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**K. உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,
A2, தரை தளம்,
எண்.110, டிரினிடி காம்ப்ளக்ஸ்,
நான்காவது அவென்யூ,
அசோக் நகர், சென்னை - 600 083.
கைப்பேசி: 9952920801
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137




# வளம் தரும் மாற்றம்!

ஸ்காட்லாந்து நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டபோது, அங்கிருந்து பஞ்சம் பிழைப்பதற்காக ஓர் ஏழைக் குடும்பம் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்தது. அந்தக் குடும்பத்தில் வந்த சிறுவன் ஆண்ட்ரூ கார்னெகி. கையில் பணமும் இல்லை, முறையான படிப்பும் இல்லை. தன் குடும்பத்தின் வறுமையைப் போக்க 13 வயதில் வேலைக்குச் சேர்ந்த கார்னெகி, வாரம் முழுக்க 70 மணி நேரம் வேலை செய்து 1.20 டாலர் சம்பளம் வாங்கினார்.

அவ்வளவு நேரம் உழைத்தாலும், அந்தச் சிறுவயதில் தன் ஓய்வு நேரத்தை அவர் விளையாடுவதற்கோ, பொழுதுபோக்கவோ செலவிடவில்லை. உள்ளூர் நூலகத்துக்குச் சென்று புத்தகங்கள் படித்தார். குறிப்பாக எஞ்சினியரிங் சார்ந்த புத்தகங்கள் அவரைக் கவர்ந்தன. அவற்றைப் படித்துத் தன் அறிவை வளர்த்துக்கொண்ட அவர், 18 வயதில் ஒரு ரயில்வே நிறுவனத்தில் தந்தி ஆபரேட்டராக வேலைக்குச் சேர்ந்தார். வாரத்துக்கு 4 டாலர் சம்பளம்.

எப்போதும் படித்துக்கொண்டும், புதிது புதிதாகக் கற்றுக்கொண்டும் இருந்த கார்னெகியைக் கவனித்தார், நிறுவனத்தின் தலைவர் தாமஸ் ஸ்காட். ‘இந்த இளைஞன் வித்தியாசமாக இருக்கிறான்’ என்று கூப்பிட்டுப் பேசினார். அவர் திறமையில் வியந்து, தன் ரயில் நிறுவனத்தின் ஒரு டிவிஷனுக்கு மேற்பார்வையாளராக நியமித்தார். தன் முதலாளியான தாமஸ் ஸ்காட்டிடம் நெருங்கிப் பழகி நிறைய விஷயங்களைக் கற்றுக்கொண்ட கார்னெகி, பிறகு தனியாக வந்து ஒரு ஸ்டீல் நிறுவனத்தைத் தொடங்கினார். அது உலகிலேயே பெரிய ஸ்டீல் நிறுவனமாக வளர்ந்தது. ஒரு கட்டத்தில் அவர் உலகிலேயே பெரும் பணக்காரர் ஆனார். அப்போது அவர் உலகம் முழுக்க ஆயிரக்கணக்கான நூலகங்களுக்கு மில்லியன்களில் டாலர்களை நன்கொடையாக அளித்தார்.



கார்னெகியின் வாழ்க்கை வளம்பெறக் காரணம் என்ன? அவர் தன் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழித்தார். நிறைய படித்தார், கற்றுக்கொண்டார். தன் வளர்ச்சிக்காகவே ஓய்வு நேரத்தைச் செலவிட்டார். நீங்கள் உங்கள் ஓய்வு நேரத்தில் என்ன செய்கிறீர்கள்? கார்னெகி தனக்குத் தேவைப்படும் ஆலோசனைகளை ஒரு நல்ல வழிகாட்டியிடம் கேட்டார். அதன்பின் கடினமாக உழைத்தார். நீங்கள் யாருடைய பேச்சைக் கேட்கிறீர்கள்? எப்படி உழைக்கிறீர்கள்?

**கீ**தா பிரமாதமாக வரைவார். டிராஃப்ட்ஸ்மேன் படிப்பை மிகச்சிறப்பாகப் படித்துத் தேர்ந்தவர். ஒரு பிரபலக் கட்டட வடிவமைப்பு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

ஒரு புதிய கட்டடத்துக்கான பிளான் தயார் செய்வது என்பது கடினமான வேலை. நீளம், அகலம், உயரம் என எல்லாவற்றையும் அளவுகளில் திட்டமிட்டு, அதற்கு ஏற்றபடி பிளான் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு அறையும் எப்படி இருக்கும் என்று தனி பிளான் போட வேண்டும். தூண்கள், சிறப்பு டிசைன்கள் ஏதேனும் இருந்தால், அந்த வடிவமைப்பையும் வரைய வேண்டும். எல்லாமே பல நாள்கள் எடுக்கும் வேலை.

கீதாவுக்கு அலுவலகத்தில் தனி டேபிள் உண்டு. வரைவதற்கான பென்சில்கள், கருவிகள் எல்லாமே அதில் நிரம்பியிருக்கும். மில்லிமீட்டர் துல்லியமாக அவர் வரைவார். பல ஆண்டுகளாக அந்த நிறுவனம் அவரை மட்டுமே நம்பியிருந்தது. அதில் கீதாவுக்குக் கர்வமும் உண்டு.

இந்த நிலையில் அந்த நிறுவனம் திடீரெனக் கட்டட பிளான்கள் வரைவதற்கான கம்ப்யூட்டர் மற்றும் சாப்ட்வேர்களை வாங்கியது. கீதாவைப் போலப் பல நாள்கள் எடுத்துக்கொள்ளாமல், அது சில நிமிடங்களில் பிளான்களை உருவாக்கிக் கொடுத்துவிடும். அது மட்டுமில்லை, அந்த பிளான்படி கட்டடம் கட்டினால் அது எப்படி இருக்கும் என்று கட்டடத்தின் முப்பரிமாணத் தோற்றத்தையும் காட்டும். வண்ணப்படமாக அப்படியே பிரிண்ட் எடுத்துவிடலாம். அது வந்த பிறகு கீதாவுக்கு வேலை இல்லாமல் போய்விட்டது.

கீதா போலப் பல்வேறு துறைகளில் இருப்பவர்கள், தங்கள் வாழ்வை வளமாக வைத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்? தொழில்நுட்பம் மிக வேகமாக மாறிவருகிறது. ஒவ்வொரு துறையிலும் அது மாற்றங்களை ஏற்படுத்துகிறது. பலவிதமான வேலைகளின் தன்மைகள் மாறிவருகின்றன. அந்த மாற்றங்களுக்கு ஏற்றபடிக் கற்றுக்கொண்டு மாறினால், நமக்கும் உண்டு வளர்ச்சி.

ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கும்போது ரிமோட் கன்ட்ரோலில் ஓடும் கார் பொம்மையே உலகில் மிகச் சிறந்த விஷயம் என நினைப்பு எழும். 10 வயதில், கம்ப்யூட்டர் கேம்கள்தான் சிறந்த விஷயமாகத் தெரியும். 16 வயதில் நண்பர்களும் விதவிதமான போதைகளும் சிறந்தவையாகத் தெரியும். 20 வயதில் ஆண்களுக்குப் பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் சிறந்த விஷயமாகத் தெரியும். 25 வயதில் பணமே சிறந்த விஷயமாகத் தெரியும். 30 வயதில் ஓய்வும் தூக்கமுமே சிறந்தவையாகத் தெரியும்.

இதிலிருந்து தெரிவது என்ன? ஒவ்வொரு வயதிலும் நம் தேர்வுகள் மாறும். இப்படி மாறிக்கொண்டே இருப்பதுதான் வாழ்வின் உன்னதம். காலத்துக்கு ஏற்ப மாறி வளம் பெறுவோம்.

# ராம்ராஜ் வேட்டி வந்தாச்சு!

மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி நிறுவனர் தின விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்களை வரவேற்று, தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் தலைவர் மற்றும் தாளாளர் திரு. K. ஹரி தியாகராஜன் அவர்கள் வாசித்த கவிதை இங்கே:

அடுப்பிலே பாலை வைத்து
அடிக்கடி பார்த்தல் போல
இடுப்பிலே கட்டும் வேட்டி
இறுக்கமாய் நிற்காவிட்டால்
கடுப்பிலே வெட்கப்பட்ட
காலங்கள் மாறிப்போச்சு
ரசிக்கவே வைக்கும் வண்ணம்
ராம்ராஜ் வேட்டி வந்தாச்சு

தடுமாறும் மழலைக் கெல்லாம்
தகதக ஜரிகை வேட்டி
படம் காட்டும் இளைஞர்க்கெல்லாம்
பெல்ட்டோடு வண்ண வேட்டி
தள்ளாடும் முதியோருக்கும்
தகுந்ததாய் நல்ல வேட்டி
வடிவங்கள் பலவானாலும்
வேட்டியோ ராம்ராஜ் தான்!

அர்ச்சகர் கட்டிக் கொள்ள
அழகான பஞ்சகச்சம்
மெச்சியே புகழும் வண்ணம்
மேல் சட்டை எக்கச்சக்கம்
கட்சியில் இருப்போர்க்கெல்லாம்
கரை வேட்டி இவர்கள் உச்சம்
ஆட்சிக்கு யார் வந்தாலும்
அகலாது ராம்ராஜ்யம்

எதிர்க்கட்சி ஆளும்கட்சி
எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்
ஒரு கட்சி ராம்ராஜ் தான்
ஊரெங்கும் கிளைகள் உண்டு
ஆதியில் தமிழர் தந்த
ஆடையாம் வெள்ளை வேட்டி
பாதியில் போகாவண்ணம்
பார்த்து நம் மானம் காத்தார்.

– மரபின் மைந்தன் முத்தையா




# முப்பெரும் விழாவாக நடைபெற்ற SKM மயிலானந்தன் சதாபிஷேக விழா!

SKM குழுமங்களின் தலைவரும், அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் நிறுவப்பட்ட உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவருமான பத்மஸ்ரீ அருள்நிதி SKM. மயிலானந்தன்– M. குட்டிலட்சுமி தம்பதியரின் சதாபிஷேக விழா கோவை கொடிசியாவில் நடைபெற்றது. சதாபிஷேக விழா, இதனையொட்டி அவிநாசி தாமரைக் குளத்தில் 8,000 பனை மரக்கன்றுகள் நடும் விழா, உலக சமுதாய சேவா சங்கத்திற்கு வளர்ச்சி நிதி வழங்கும் விழா என்ற முப்பெரும் விழாவாக இது சிறப்பாக நடைபெற்றது. இந்தப் பிரமாண்ட விழாவில் கொங்கு மண்டலத்தின் முக்கியத் தொழில் பிரமுகர்கள், மனவளக்கலை அன்பர்கள் மற்றும் உறவினர்கள் எனச் சுமார் 10,000 பேர் கலந்துகொண்டனர்.

SKM குடும்பத்தினரும் உலக சமுதாய சேவா சங்கமும் இணைந்து நடத்திய இவ்விழாவில் பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவரும் ஆழியாறு அறிவுத்திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவருமான திரு. S.V.பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கி, SKM. மயிலானந்தன் வாழ்க்கை வரலாறு குறும்படத்தை வெளியிட்டார். மேலும், இவ்விழாவில் SKM. மயிலானந்தன் அவர்களைப் பற்றிய 'வாழ்வெனும் பேரின்பம்', 'ஆயிரம் பிறை கண்ட அருள்நிதி' ஆகிய புத்தகங்களும், ராம்ராஜ் காட்டன் சார்பில் 'வேதாத்திரியம் 80' என்ற புத்தகமும் வெளியிடப்பட்டது. இப்புத்தகங்கள் அனைத்தும் வந்திருந்த அனைத்து விருந்தினர்களுக்கும் பரிசாக வழங்கப்பட்டன. பனைமரக் கன்றுகள் நடும் சேவையை, பல்லடம் வனம் இந்தியா பவுண்டேஷன் செயலாளர் திரு. V.சுந்தர்ராஜ் அவர்கள் நிறைவு செய்து அதனை SKM. மயிலானந்தனிடம் சமர்ப்பித்தார்.

விழாவில் முக்கிய அம்சமாக உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவர்களும் ஆழியாறு அறிவுத்திருக்கோயில் அறங்காவலர்களும் இணைந்து, உலக சமுதாய சேவா சங்கத்திற்கு வளர்ச்சி நிதியாக ரூபாய் ஒன்பது கோடி வழங்கினர். ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R.நாகராஜன் அவர்கள் இதற்கான காசோலையைத் திரு. SKM. மயிலானந்தன் அவர்களிடம் வழங்கினார்.

SKM. மயிலானந்தன் அவர்கள் தனது ஏற்புரையில், "பிறருக்குத் துன்பம் தராமலும் பிறரால் தனக்குத் துன்பம் உண்டாகாமலும் வாழக்கூடிய வாழ்க்கை நெறியை மனவளக்கலை பயிற்றுவிக்கிறது. இக்காலத்திற்குத் தேவையான இந்த ஆன்மிகப் பயிற்சியை வாழ்க்கைக் கல்வியாக உலக சமுதாய சேவா சங்கம் வழங்குகிறது" என்றார். மேலும், ''இவ்விழா எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. தொடர்ந்து தொண்டாற்றுவதற்கு உற்சாகத்தையும் வழங்கியுள்ளது. இதற்காக உழைத்த அனைவருக்கும் எனது சார்பாகவும், எனது குடும்பத்தினர் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார். விழாவில் கலந்துகொண்ட அனைவரும் சதாபிஷேகம் கண்ட தம்பதியரிடம் ஆசி பெற்றனர்.





## அன்பாசிரியர் விருது வழங்கும் விழா!

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சிறப்பான கல்விப் பணியோடு, சமூக அக்கறை உள்ள மாணவர்களையும் உருவாக்கி வரும் ஆசிரியர்களுக்கு அன்பாசிரியர் விருதுகள் ஒவ்வொரு வருடமும் ராம்ராஜ் காட்டன் மூலமாக வழங்கப்படுகின்றன. ராம்ராஜ் காட்டன் நிறுவனமும் இந்து தமிழ் திசை நாளிதழும் இணைந்து வழங்கிய அன்பாசிரியர் விருது வழங்கும் விழா 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று திருச்சியில் நடைபெற்றது. தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சிறப்புரை ஆற்றி விருதுகள் வழங்கினார். ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் அன்பாசிரியர்களுக்கு விருது வழங்கிச் சிறப்பித்து, வாழ்த்துரை வழங்கினார்.

“தனக்காக மட்டுமின்றிச் சமூகத்திற்காக வாழ்பவர்களே, வரலாற்றுப் பக்கத்தில் என்றென்றும் நீடித்து நிலைத்து இருக்கிறார்கள். அந்த வகையில் அன்பாசிரியர் விருது பெறும் அனைத்து ஆசிரியர்களும் ஒவ்வொருவர் மாணவர் மனதிலும் என்றும் நீங்காத இடம் பிடித்திருப்பார்கள்” என்று சொல்லி, அக்கறையோடு பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவித்தார். விழா ஏற்பாடுகளை இந்து தமிழ் இசை நாளிதழ் நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

## தியாகராஜர் கல்லூரி விழாவில் ராம்ராஜ்!




மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிறுவனர் தின விழாவில், ராம்ராஜ் காட்டன் நிறுவனர்– தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் தலைவர் மற்றும் தாளாளர் திரு. K. ஹரி தியாகராஜன் அவர்கள் வரவேற்றார்.

திரு. K.R. நாகராஜன் அவர்கள் தனது சிறப்புரையில், தியாகராஜர் கல்விக்குழுமங்களின் நிறுவனர் கலைத்தந்தை திரு. கருமுத்து தியாகராஜன் செட்டியார் மற்றும் அவரது மகன் திரு. கருமுத்து கண்ணன் ஆகியோர் ஆற்றிய கல்விப் பணிகள் குறித்தும், தொழில்துறையில் அவர்கள் புரிந்த சாதனை குறித்தும் குறிப்பிட்டார். மதுரை மாநகரின் அடையாளமாகத் திகழும் இக்கல்லூரியில் பயிலும் வாய்ப்புப் பெற்றவர்கள் தொடர்ந்து இக்கல்லூரியின் சிறப்பை நிலைநிறுத்துவதற்கு தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



# வாழ்க்கைத்துணை தரும் வளம்!

ஒரே அலுவலகத்தில் பணியில் சேர்ந்து, நண்பர்களாக மாறி, நெருங்கிப் பழகிக் காதலில் விழுந்தவர்கள் கணேஷும் ஆர்த்தியும். கணேஷ் இந்தக் காதலைத் தன் வீட்டில் சொல்லி, ஆர்த்தியைத் திருமணம் செய்துகொள்ள அனுமதி வாங்கினான். இதேபோல ஆர்த்தி வீட்டிலும் போய்ப் பேசினான். கணேஷின் கண்ணியமான அணுகுமுறை அவர்களுக்குப் பிடித்திருந்தது. இரண்டு குடும்பங்களுமே ஒரே மாதிரி அந்தஸ்து கொண்டவை, ஒரே நகரத்தில் வசிப்பவை, ஒரே சமூகத்தைச் சேர்ந்தவை என்பதால் எல்லோருக்குமே இதில் சம்மதம்தான். அதனால் கணேஷும் ஆர்த்தியும் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருமணம் உறுதியான பிறகு கணேஷ் வீட்டுக்கு அடிக்கடி வர ஆரம்பித்தாள் ஆர்த்தி. அதில் பிரச்னையில்லை. ஆனால், அவள் செய்த செயல்கள்தான் பிரச்னையில் முடிந்தன. கணேஷ் வாய் கூசாமல் பேசுகிற ரகம் இல்லை. நண்பர்களிடம் நிறைய அரட்டை அடிப்பான். ஆனால், வீட்டில் ஒவ்வொருவரிடமும் எதைப் பேசுவது, எதைப் பேசக்கூடாது என்று தெளிவாக அறிந்து பேசுவான். அவர்களுக்குத் தெரிய வேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிடுவான். நம்மால் தீர்வு காண முடியாத விஷயங்களைத்தான் வீட்டுப் பெரியவர்களிடம் எடுத்துப் போக வேண்டும், அவர்கள் முடிவெடுக்க வேண்டிய செயல்களைப் பற்றி மட்டும் அவர்களிடம் சொன்னால் போதும் என்று இருப்பான்.

ஆனால், ஆர்த்தி அப்படி இல்லை. தினமும் வீட்டுக்குப் போனதும் அம்மாவிடம் எல்லா விஷயங்களையும் கிளிப்பிள்ளை போல ஒப்பித்துவிடுவாள். அவள் அதே பழக்கத்தைக் கணேஷ் வீட்டிலும் பின்பற்றத் தொடங்கியதுதான் பிரச்னை.

கணேஷ் எப்படித் தன்னிடம் காதலைச் சொன்னான், எதனால் இரண்டு பேருக்கும் காதல் மலர்ந்தது, கணேஷ் எதற்காகவெல்லாம் தன்னுடன் சண்டை போடுவான், எந்த விஷயங்கள் அவனுக்குப் பிடிக்காது என்றெல்லாம் விலாவாரியாக கணேஷின் வீட்டினருடன் அவள் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தாள். 'நான் உள்ளே ஒன்றை வைத்துக்கொண்டு வெளியில் வேறுவிதமாகப் பேச மாட்டேன்' என்று காட்டுவதற்காக ஆர்த்தி இதைச் செய்தாள். அவள் இயல்பும் அதுதான். ஆனால், எல்லாவற்றையும் எல்லோரிடமும் சொல்வது அர்த்தமில்லை என்பது அவளுக்குப் புரியவில்லை.

விளைவு... கணேஷ் தன் வீட்டில் தினம் தினம் சங்கடங்களைச் சந்திக்க ஆரம்பித்தான். அவன் காதலை ஆர்த்தியிடம் சொன்னபோது பேசிய வார்த்தைகளை அப்படியே பேசி அவன் தங்கை கிண்டல் செய்தாள். மிகவும் அந்தரங்கமான ஓர் உரையாடல் இப்படிக் கேலிப் பொருள் மாதிரி ஆனதில் கணேஷ் கூசிப் போனான். "உனக்கு முருங்கைக்கீரை பிடிக்காதுன்னு ஆர்த்திகிட்ட சொன்னியாமே! அது உடம்புக்கு நல்லதுடா... சாப்பிடு" என்று அட்வைஸ் செய்தார் அம்மா. "வெளியில ஆர்த்தியைக் கூட்டிப் போகும்போது சாப்பாட்டுக்குச் செலவழிக்கறதுக்கெல்லாம் கணக்குப் பார்க்காதேடா, அது தப்பு" என்று அப்பா சொன்னார். அவன் ஏதோ ஒரு தருணத்தில், 'இந்த சாதாரண மோமோஸ் இவ்வளவு விலை சொல்றாங்களே' எனத் தவிர்த்ததை ஆர்த்தி தவறாகப் புரிந்துகொண்டதைக் கணேஷ் உணர்ந்தான்.

அவன் ஆர்த்தியிடம் போய் இதையெல்லாம் கேட்டபோது, இருவருக்கும் சண்டை எழுந்தது. அந்தச் சண்டைகள் பற்றியும் கணேஷ் வீட்டில் வந்து சொன்னாள் ஆர்த்தி. "அவ சின்னப்பொண்ணு, ஏன்டா அவகிட்ட சண்டை போடறே" எனப் பரிந்து பேசினார் அம்மா. ஒரு கட்டத்தில் தன் வீட்டில் எல்லோரும் ஆர்த்தி பக்கம் இருக்க, தான் மட்டும் தனியே இருப்பது போல உணர்ந்தான் கணேஷ்.

கணேஷ் இதற்கிடையில் ஒருமுறைகூட ஆர்த்தி பற்றி அவள் பெற்றோரிடம் பேசியதில்லை. இப்படி எல்லா விஷயங்களையும் அவள் வந்து தன் வீட்டில் பேசுவது,

இருவரின் உறவு விஷயத்தில் தன் பெற்றோர் அடிக்கடி தலையிடுவது, எல்லாமே தனக்கு எரிச்சல் தருவதைப் பற்றி ஆர்த்தியிடம் வெளிப்படையாகப் பேசினான் கணேஷ். அதையும் ஆர்த்தி வந்து புகாராக கணேஷின் பெற்றோரிடம் சொல்ல, ''எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்'' என அதன்பின் உறுதியாக மறுத்தான் கணேஷ்.

வாழ்க்கைத்துணைவர்களாக இணையும் இருவருக்கு இடையில் பல விஷயங்கள் அந்தரங்கமானவை. பெற்றோராக இருந்தாலும், மூன்றாம் நபர் தலையீடு என்பது இதில் கூடாது. நிலைமை கையை மீறிப் போகும் அளவுக்கு உறவுச்சிக்கல் ஏதேனும் வந்தால் மட்டுமே தலையீடு தேவைப்படும். மற்றபடி எல்லா முரண்களையும், எல்லாச் சிக்கல்களையும், எல்லாச் சண்டைகளையும் இருவர் மட்டுமேதான் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதை முதிர்ச்சியாகவும் பக்குவத்துடனும் செய்ய வேண்டும். இருவரும் எதிரெதிர் துருவமாக நின்று அல்ல, அருகருகே நின்று பேசித் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் இவை. அப்படி இருப்பது மட்டுமே திருமண உறவை வளமாக்கும்.

**வாழ்க்கைத்துணையின் மூலம் வளம் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் என்னென்ன?**

● 'சண்டையை முதலில் ஆரம்பிப்பவர், அதன்மூலம் என்ன இழப்பு என்பதையும் கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு ஆரம்பிக்க வேண்டும்' என்று ஒரு புகழ்பெற்ற பொன்மொழி உண்டு. அது நாடுகளுக்கு இடையிலான சண்டைக்கு மட்டுமில்லை, வீட்டுச் சண்டைக்கும் பொருந்தும். ஒரு விஷயம் முக்கியமில்லை என்று கருதினாலோ, அதனால் பெரிய பாதிப்புகள் இல்லையென்று நம்பினாலோ, அதைக் காரணமாக வைத்து எந்தச் சண்டையையும் ஆரம்பிக்காதீர்கள்.

● உங்கள் உணர்வுகள் உங்களை ஆக்கிரமிக்க அனுமதிக்காதீர்கள். உங்கள் கட்டுப்பாட்டுக்குள் அவற்றை வையுங்கள். வாழ்க்கைத்துணையின் பேச்சோ, செயலோ உங்களை எரிச்சலில் தள்ளும்போது, கோபத்துக்கு ஆளாக்கும்போது, சண்டை வேண்டாம். அமைதியாக எழுந்து வெளியில் சென்றுவிடுங்கள்.

● ஒரு சண்டையின்போது, "நீ எப்பவும் இப்படித்தான் பேசுறே'' என்று எப்போதோ நடந்த சம்பவத்தைச் சொல்லிக் குத்திக் காட்டாதீர்கள். முரட்டுத்தனமாகவோ, மரியாதைக்குறைவாகவோ நடந்துகொள்ளாதீர்கள். கெட்ட வார்த்தைகள் சொல்லியோ, பட்டப்பெயர்கள் சூட்டியோ திட்டுவது அநாகரிகம்.

● "உன்னைத் தவிர வேற யாரையாவது கல்யாணம் பண்ணியிருந்தா, நான் நல்லா இருந்திருப்பேன்" எனக் கணவன் சொல்வதும் தவறு. "என் ஃபிரண்ட் சித்ராவோட புருஷன் அவ என்ன சொன்னாலும் கேட்கிறார். நீங்க எப்பவும் என்கூட வாக்குவாதம் பண்ணுவீங்க" என்று மனைவி ஒப்பிடுவதும் தவறு.

● தம்பதியருக்குள் நிகழும் முரண்பாடோ, வாக்குவாதமோ, சண்டையோ, நான்கு சுவர்களுக்குள்தான் நிகழ வேண்டும். குழந்தைகள் எதிரில்கூடச் சண்டை போடாதீர்கள்.

● அன்பை வெளிப்படுத்துவதில் எப்போதும் குறை வைக்காதீர்கள். 20 வயதில் புது டிரஸ் வாங்கிக்கொடுத்து அன்பை வெளிப்படுத்தலாம், 70 வயதில் கைப்பிடித்து வாக்கிங் அழைத்துச் சென்று அன்பை வெளிப்படுத்தலாம். எல்லா வயதிலும் அன்பால் இணைந்திருங்கள். ●


**வெண்மை சந்தா...**

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

## ஈர்க்கும் காந்த விதி!



- இரும்பை மட்டுமே காந்தம் ஈர்க்கும். ஏனெனில் அதன் தன்மை அப்படி! உங்களின் தன்மை எப்படி இருக்கிறதோ, அதைப் பொறுத்தே உங்களுக்கானவை வரும்.
- நாம் விரும்புவதால் மட்டுமே எதுவும் நமக்குக் கிடைத்துவிடாது. அதற்கு முயற்சி செய்ய வேண்டும். வெற்றி மனநிலை இருப்பவர்களால் மட்டுமே வெற்றியை ஈர்க்க முடியும்.
- அமைதி, நம்பிக்கை மற்றும் உற்சாகத்துடன் இருக்கும் ஒருவர், எவரையும் ஈர்க்க முடியும்.
- காந்தத்தில் நீண்ட நேரம் ஒட்டியிருக்கும் இரும்பு, காந்தத்தன்மை பெறும். நீங்கள் எந்த விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி அதுபற்றிய சிந்தனையோடு இருக்கிறீர்களோ, அதுவாகவே நீங்கள் ஆகிவிட முடியும்.
- உங்களுக்குத் தேவைப்படாத ஒரு விஷயத்துடன் சண்டை போட்டுக் கொண்டிருக்காதீர்கள். அதற்குப் பதிலாக, தேவைப்படும் விஷயத்தில் கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் கனவு எதுவோ, அதை நீங்கள் மனதால் உணர்வீர்கள். மனதால் உணரும் ஒன்றை உங்களை நோக்கி ஈர்க்க உங்களால் முடியும்.
- ‘இப்படி ஆகுமோ’, ‘அப்படி முடிந்துவிடுமோ’ என்று எதைப் பற்றியும் அதிகம் சிந்தித்துக் குழப்பிக்கொள்ளாதீர்கள். எதையும் நம்புங்கள், அது நடக்கும்.

## அதுவும் இசை தரும்!

வாழ்க்கை என்பது ஒரு பியானோ போன்றது. பியானோவில் இருக்கும் வெள்ளை மற்றும் கருப்புக் கட்டைகளை நினைத்துப் பாருங்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் தரும் சம்பவங்கள் அந்த வெள்ளைக்கட்டைகளையும், பின்னடைவுகள் கருப்புக் கட்டைகளையும் பிரதிபலிப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். ஒரு விஷயத்தை மறக்காதீர்கள். பியானோவின் கருப்புக் கட்டைகளும் இசையை வெளிப்படுத்தும். எனவே, பின்னடைவுகளைப் பிரச்னையாக நினைக்காதீர்கள்.

## வளம் தரும் ஆரம்பம்!

பள்ளியில் முதன்முதலாகச் சேர்ந்து 1, 2, 3 என்று எண்களையும், a, b, c என எழுத்துகளையும் எழுதிப் பழக ஆரம்பிக்கும் ஒரு குழந்தைக்கு அவற்றின் வடிவங்கள் புதிராக இருக்கும். அப்போது அவர்களுக்கு எண்களுக்கும் எழுத்துகளுக்குமே வித்தியாசம் தெரியாது. எதற்கு எப்படிக் கோடு வளைக்க வேண்டும் என்பதும் புரியாது. குழம்பிப் போய்த் தப்புத் தப்பாக எழுதும். அப்போது அந்தக் குழந்தைகளிடம் போய், “நீ இந்த எண்களைப் பயன்படுத்திக் கணக்குகள் போட வேண்டும். எழுத்துகளைப் பயன்படுத்தி வார்த்தைகளை உருவாக்க வேண்டும்” என்று சொன்னால் திகைத்துவிடும்.

ஆனால், சரியாகவோ, தவறாகவோ தயக்கமின்றி எழுத ஆரம்பிக்கும் குழந்தைதான் விரைவில் கற்றுக்கொள்கிறது. வளர்ந்த பிறகு, ‘இதற்கா நாம் குழம்பினோம், தயங்கினோம்’ என்று எண்ணி வெட்கப்படுகிறது. எதையும் செய்ய ஆரம்பித்து, தொடர்ந்து பயிற்சி பெறும் ஒருவர், வளமுடன் வாழ்வில் உயரலாம்.



# வளம் நிலைக்க வழி தேடுங்கள்!



- எதற்காகவும் கோபமோ, வருத்தமோ, எரிச்சலோ அடைவதை 24 மணி நேரத்துக்குத் தள்ளிப் போடுங்கள். 24 மணி நேரம் தாண்டியும் அது உங்களை உறுத்தினால் மட்டும் ரீயாக்ட் செய்யுங்கள். இல்லாவிட்டால் அந்தப் பிரச்னையை விட்டுவிடுங்கள்.
- வாழ்க்கையில் சிரிக்கக் கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிடாதீர்கள். எரிச்சலான தருணங்களைக்கூடப் புன்னகையோடு உங்களால் கடக்க முடிந்தால், உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்!
- கடந்த காலத்தை அசை போடும்போது வெற்றிகரமான, மகிழ்ச்சியான தருணங்களை மட்டுமே நினையுங்கள். தோல்விகளைத் திரும்பத் திரும்ப நினைக்காதீர்கள்.
- அடுத்தவர்களின் செயல்களை உங்களால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், அதற்கு எதிர்வினை ஆற்றுவதை உங்களால் கட்டுப்படுத்த முடியும். கோபம், பொறாமை, எரிச்சல், கிண்டல் போன்ற எதிர்மறை உணர்வுகளை எதிர்கொள்ளும்போது ரீயாக்ட் செய்யாமல் கடந்துவிடுங்கள்.
- இந்த நிமிடத்தில் நீங்கள் எதை நினைத்து எப்படி முடிவெடுக்கிறீர்களோ, அது சரியான முடிவு. உள்ளுணர்வு சொல்வதைக் கேட்டு எல்லாத் தருணங்களிலும் இப்படித் திட்டமிட்டு முடிவெடுங்கள். அது நல்ல வளம் தரும் என நம்புங்கள்.
- வாழ்க்கையில் செட்டில் ஆவதற்குச் சரியான வயது எது என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அதற்கென உள்ள சரியான நேரத்தில் செட்டில் ஆகியிருக்க வேண்டும்.

## அவர் வந்த ராசி!




வசதியான ஒரு குடும்பத்தில் மூன்று ஆண் குழந்தைகளுக்குப் பிறகு நான்காவதாகப் பெண் பிறக்கிறாள். குடும்பத் தொழில் சரியாக நடைபெறாமல் வறுமையில் வீழ்கிறது அந்தக் குடும்பம். "நீ பிறந்த நேரம்தான் இப்படி ஆகிவிட்டது" என்று சொல்லியே மகளை வளர்க்கிறார் அப்பா. "நீ ராசி இல்லாதவள்" என்று அண்ணன்களும் நோகடிக்கின்றனர். கவலையும் கண்ணீருமாக வளர்கிறாள் அவள். இருந்தாலும் கல்வியால் தன் ராசியை மாற்ற முயன்று, நன்கு படிக்கிறாள்.

கடைவீதியில் ஒருநாள் அண்ணன்களைப் பார்க்கச் சென்ற இவளைப் பிடித்துப் போய் ஓர் இளைஞன் பெண் கேட்டு வருகிறான். புதிதாகத் தொழில் தொடங்கியவன், நல்ல பண்புகள் உடையவன் என அண்ணன்களுக்குத் தெரியும். 'ராசியில்லாத தங்கையைத் தள்ளிவிட்டால் போதும்' எனத் திருமணம் செய்து கொடுக்கின்றனர்.

கணவனின் தொழிலுக்குத் தன் கல்வியால் மாற்றம் தருகிறாள். புதிய வியாபார டெக்னிக்குகள், ஆன்லைன் வியாபாரம், சமூக வலைதளங்களில் வர்த்தகம் செய்வது என்று உதவுகிறாள். என்ன செய்தாலும், கணவன் வெளியில் செல்லும்போது எதிரே நிற்க மாட்டாள். வீட்டு விசேஷங்களில் முன்னே நிற்க மாட்டாள். "ஏன் இப்படி இருக்கிறாய்?" என்று கேட்ட கணவனிடம், "நான் ராசி இல்லாதவள்" என்று சொல்லி அழுகிறாள்.

ஆண்டுகள் நகர்கின்றன. கணவன் தன் தொழில் நிறுவனத்தை விரிவுபடுத்துகிறான். புதிதாக வீடு கட்டுகிறான். புதுமனை புகுவிழாவுக்கு எல்லோரையும் அழைத்தான். அவள் அண்ணன்கள் வியப்பாகி, ''எப்படி இவ்வளவு குறுகிய காலத்தில் இப்படி வளர்ச்சி? ஏதாவது புதையல் கிடைத்ததா?" என்று கிண்டலாகக் கேட்கின்றனர். அவனோ, "ஆமாம், உங்கள் தங்கைதான் எனக்குப் புதையலாகக் கிடைத்தார். என் மனைவி வந்த ராசிதான் இந்த வளம் கொடுத்தது" என்றான். முதல்முறையாகத் தன் ராசி பற்றி நேர்மறையான வார்த்தைகள் கேட்டு அவள் மனதார அழுதபடி அண்ணன்களைக் கர்வத்துடன் பார்த்தாள்.



# சொந்தக் காலில் நின்று வளம் பெறலாம்!

**மலையில் பாறைகளுக்கு நடுவில் கிடைத்த சிறிய இடைவெளியில் வேர்விட்டு வளரும் மரங்களைப் பார்த்திருப்பீர்கள். தண்ணீர், உயிர்ச்சத்து என ஒவ்வொன்றையும் போராடிப் பெற்று வாழும் மரம் அது. இப்படி யாரையும் சார்ந்து இருக்காமல், தன் சொந்தக் காலில் நின்று வாழ்வது சுயசார்பு வாழ்க்கை.**

கடினமான சில தருணங்களில் நண்பர்களோ, உறவுகளோ உதவிக்கு வராமல் போகலாம். அப்போது சுயமாக முடிவெடுத்து, சுயேச்சையாகச் செயல்பட்டு இயங்க வேண்டும். இதுவே தொடரும்போது, அது சுயசார்பு வாழ்க்கையாக மாறிவிடும். நம் சொந்தக்காலில் நின்று வாழ்வது ஒரு பெரிய பலம். அந்த வாழ்க்கையில் வளம் பெறும்போது, நமக்குத் தனி அடையாளம் கிடைக்கும். இதில் பல நன்மைகள் உண்டு. அவை:

**சுயமாக முடிவுகள் எடுப்பது:** மற்றவர்களிடம் ஆலோசனை கேட்கலாம். ஆனால், நமக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அந்த முடிவை எடுப்பது. தொழிலில் அடுத்த முடிவு என்ன எடுப்பது என்பது முதல், அடுத்த வேலையாக எதற்குப்போவது என்பது வரை நாமே தீர்மானிக்க வேண்டும். புகை, மது எனத் தவறான பாதைகளுக்குப் போகாமல் தவிர்ப்பது, எந்தச் சூழலிலும் நெறி தவறாமல் இருப்பது ஆகியவை இந்த வாழ்க்கையில் உள்ள சவால்கள்.

**பொறுப்பு ஏற்பது:** சுயமாக முடிவெடுத்து ஒரு விஷயத்தைச் செய்கிறீர்கள். அதில் ஏதோ தவறு ஏற்படுகிறது. அடுத்தவர்கள் மீது பழியைப் போடாமல், 'என் தவறுதான்' என்று பொறுப்பை ஏற்பது சுயசார்பில் ஓர் அங்கம். அப்போதுதான், அடுத்த முறை சரியாகச் செய்வதற்கு வழி தெரியும். தெரிந்தோ, தெரியாமலோ, யாரையோ புண்படுத்தி விடுகிறீர்கள். தயங்காமல் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டும். இன்னொருமுறை யாரையும் காயப்படுத்தாமல் இருப்பது எப்படி என்பதை இப்படித்தான் கற்றுக்கொள்கிறீர்கள். பொறுப்பேற்காத எவரும் சுயசார்புடன் வாழ முடியாது.

**தனித்து இயங்குவது:** ஒரு ரயில் பெட்டி தனியாகப் போகாது. அதை இழுத்துச் செல்ல ஓர் எஞ்சின் வேண்டும். ஆனால், பேருந்து அப்படி கிடையாது. அது தனித்து இயங்கும். சுயசார்புடன் வாழும்போது உங்களுக்கான முடிவுகளை நீங்களே எடுத்துச் சுயமாக இயங்கலாம். அந்த வாழ்க்கையில் யாருடைய அடையாளமும் இல்லாமல், நீங்கள் தனியாகத் தெரிவீர்கள். உங்கள் வாழ்க்கையில் எல்லாக் கேள்விகளுக்கும் உங்களிடம் பதில் இருக்கும்.

**அடுத்தவர் அனுமதி தேவையில்லை:** நீங்கள் விரும்பும், செய்ய ஆசைப்படும் எதையும் செய்வதற்கு அடுத்தவர்களின் அனுமதிக்காகக் காத்திருக்கத் தேவையில்லை. மனநிறைவுடன், முழு வேகத்துடன், நீங்கள் நினைக்கும் எதையும் செய்யலாம். நீங்கள் விரும்பும் ஒரு வாழ்க்கைக்கு இது அடித்தளமாக அமையும். ஆனால், தவறான, சட்டவிரோதமான எதையும் செய்வதற்கான லைசென்ஸ் உங்களுக்குக் கிடைத்துவிடவில்லை என்பது ஞாபகம் இருக்கட்டும்.

**எதிர்காலம் உங்கள் கையில்:** சுயசார்பு வாழ்க்கையில், உங்கள் எதிர்காலத்துக்கு நீங்கள் மட்டுமே பொறுப்பு ஆவீர்கள். எந்த முடிவு எடுக்கும்போதும், அதன் சாதக பாதகங்களை அலசுங்கள். அது உங்களை எங்கே கொண்டு செல்லும் என்பதை யோசியுங்கள். அவசரமாகவோ, உணர்வுகளால் உந்தப்பட்டோ முடிவுகள் எடுக்காதீர்கள். உங்களுக்கு வளமான எதிர்காலம் நிச்சயம். ●



# வளம் தரும் வாழ்க்கை முடிவுகள்!

**காட்டில் திடீரெனப் போர் மூண்டதும், எல்லா விலங்குகளும் ராணுவத்தில் சேர வேண்டும் என உத்தரவு போடப்பட்டது. நண்பர்களாக இருந்த முயல், நரி, கரடி ஆகிய மூன்றும் எப்படியாவது போருக்குப் போகாமல் தப்பிக்க நினைத்தன. மருத்துவப் பரிசோதனையில் தேர்ச்சி அடையாவிட்டால் ராணுவத்தில் சேர்க்க மாட்டார்கள் என்ற விஷயம் அப்போது தெரிந்தது.**

மருத்துவப் பரிசோதனைக்குப் போனபோது முயல் திரும்பி நரியைப் பார்த்து, “என் காதைக் கடித்துவிடு. அந்தக் காயத்தைக் காட்டி நான் தப்பித்துக்கொள்கிறேன்” என்றது. நரியும் கடித்தது. அதன்பின் உள்ளே போன முயல், வலியையும் மறந்து உற்சாகமாகத் திரும்பி வந்தது, “காது சரியாக இல்லாமல் என்னால் எதிரிகளைப் பற்றித் துப்பறிய முடியாது. அதனால் நிராகரித்துவிட்டனர்” என்று கத்தியது.

அடுத்து நரி உள்ளே போக வேண்டும். அது கரடியிடம் திரும்பி, “என் வாலைக் கடித்துவிடு. அதைக் காரணமாகக் காட்டித் தப்பித்துக்கொள்கிறேன்” என்றது. கரடி கடித்தது. வாலில் ரத்தக்காயத்துடன் உள்ளே போய், நிராகரிக்கப்பட்டுத் திரும்பி வந்தது நரி.

அடுத்து கரடியின் முறை. அது முயலையும் நரியையும் அழைத்து, “என் முன் பல்லை உடைத்துவிடுங்கள். பல் இல்லாமல் எனக்குச் சக்தி கிடையாது என்பதைச் சொல்லித் தப்பித்துக்கொள்கிறேன்” என்றது. இரண்டும் சேர்ந்து கரடியின் வாயில் குத்திப் பல்லை உடைத்தன. உள்ளே போன கரடி, உற்சாகமாக ஓடிவந்தது. “என்னைத் திரும்பிப் போகச் சொல்லிவிட்டனர். ஆனால், உங்கள் இரண்டு பேரையும் திரும்பவும் உள்ளே கூப்பிடுகிறார்கள். என்னைப் பயந்தாங்கொள்ளி கரடி எனத் துரத்தினர். என்னையே அடிக்கும் அளவுக்குத் துணிச்சல் வீரர்களான நீங்கள் இரண்டு பேரும் ராணுவத்துக்குக் கண்டிப்பாகத் தேவையாம்!” என்றது கரடி.

முயலை நரி அடித்ததும், நரியைக் கரடி அடித்ததும் சரியான முடிவு. கரடி எடுத்த அபத்தமான முடிவால், அதன் நண்பர்கள் பாதிக்கப்பட்டன. வாழ்க்கைக்கு வளம் தரும் சரியான முடிவுகளை எடுப்பது எப்படி?

- சில சந்தர்ப்பங்களில் நாம் சொல்வதுதான் சரி என்று வாதாடுவதைவிட, அமைதியாக இருப்பது நல்ல முடிவு.
- நாம் எப்படிப்பட்ட மனிதராக இருக்கிறோமோ, அப்படிப்பட்டவர்களே நம்மால் ஈர்க்கப்படுகிறார்கள். சரியான மனிதராக இருப்போம்.
- சில வலிகளுக்கும், சில வருத்தங்களுக்கும் காலமே சிறந்த மருந்து. அவை நிதானமாக ஆறட்டும் என்று கடந்து செல்வோம்.
- எந்த உறவும் நம்பிக்கை என்ற அஸ்திவாரத்தின் மீதே கட்டப்படுகிறது. எனவே, நம்பிக்கையை ஏற்படுத்துங்கள்.
- அடுத்தவர்களிடம் கனிவாக இருங்கள், கருணையை வெளிப்படுத்துங்கள். அதே சமயத்தில், செயல்களிலும் முடிவுகளிலும் உறுதியாக இருங்கள்.
- பெரும்பாலான சூழல்களில் நாம் என்ன நினைக்கிறோம் என்பதைத் தெளிவாகச் சொல்லிவிடுவது நல்லது. நாம் சொல்லும் வார்த்தைகளைக் காப்பாற்றுவதும் சிறப்பு.
- சில பிரச்னைகள் அப்படியே விட்டால் சரியாகிவிடும். சில பிரச்னைகளை அப்படியே விட்டால், நம் மகிழ்ச்சி பறிபோய்விடும். இரண்டாவது ரகப் பிரச்னைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும்.
- சில தருணங்களில், ‘இது கடினமான செயல்’ என நாம் அலட்சியம் செய்த ஆலோசனையே சிறந்த ஆலோசனையாக இருக்கும். அதை மறுபரிசீலனை செய்யுங்கள்.




# அகரம் விதை திட்டத்துக்கு நன்கொடை வழங்கிய ராம்ராஜ்!



திரைக்கலைஞர் திரு. சூர்யா அவர்கள் அகரம் அறக்கட்டளையை நடத்திவருகிறார். இதன்மூலம் எளிய குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி வழங்கும் 'விதை' திட்டம் 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதற்காக அகரம் 'விதை' 15–ம் ஆண்டுக் கொண்டாட்டம் சென்னையில் நடைபெற்றது. விதைத் திட்டத்தின் மூலம் உயர்ந்த பல்லாயிரக்கணக்கானவர்களும் அவர்களின் பெற்றோர்களும் பங்கேற்ற இந்த விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் – தலைவர் திரு. K.R. நாகராஜன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். அவருக்குத் திரைக்கலைஞரும் எம்.பி–யுமான திரு. கமல்ஹாசன் அவர்கள் நினைவுப்பரிசு வழங்கினார். திரு. சூர்யா புத்தகம் வழங்கினார். திரைக்கலைஞர்கள் திரு. சிவகுமார், திரு. கார்த்தி ஆகியோர் உடன் இருந்தனர்.

திரு. K.R. நாகராஜன் தனது உரையில், "சிவகுமார் அறக்கட்டளை என்ற பெயரில் பல ஆண்டுகளுக்கு முன்பு திரு. சிவகுமார் அவர்கள் நட்ட விதை இன்று அகரம் என்ற விருட்சமாக வளர்ந்துள்ளது. 'அறம் செய்ய விரும்பு' என்று ஔவையார் சொன்னதை எல்லோரும் படித்துவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால், அதை வாழ்க்கை அறமாக எடுத்துக்கொண்டு செயலில் காட்டியுள்ள திரு. சூர்யா, திரு. கார்த்தி ஆகியோர் போற்றப்பட வேண்டியவர்கள்" என்றார்.

இந்தக் கொண்டாடத்தை முன்னிட்டு விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற 'அகரம் சூர்யாவின் கல்வியே ஆயுதம்' நிகழ்ச்சியில் பங்கேற்று, அகரம் அறக்கட்டளைக்குத் திரு. K.R. நாகராஜன் ரூ. 25 லட்சம் நன்கொடை வழங்கினார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர் ரூ.1 கோடி நன்கொடை வழங்கியது குறிப்பிடத்தக்கது. அகரம் செயல்பாடுகளுக்கு ராம்ராஜ் காட்டன் நிறுவனம் தொடர்ச்சியாக ஆதரவளித்து வருகிறது.



# அங்கீகாரம் – இது ராம்ராஜின் புனிதப் பயணம்!

நமது பாரம்பரிய உடையும், தேசிய உடையுமான வேட்டிக்குச் செல்வாக்கும் மரியாதையும் அங்கீகாரமும் பெற்றுத் தந்து, அதை மதிப்பிற்குரியவர்களின் உடையாக மாற்றிய ராம்ராஜ் காட்டன் நிறுவனர்–தலைவர் திரு. K.R. நாகராஜன் அவர்களின் வெற்றிகரமான புனிதப்பயணத்தை விவரிக்கிறது, ‘அங்கீகாரம்’ என்ற குறும்படம். ராம்ராஜ் காட்டன் யூடியூப் சேனலில் இது வெளியிடப்பட்டுள்ளது. வேட்டிக்கு அங்கீகாரம் பெற்றுத் தந்த ராம்ராஜ் காட்டன் நிறுவனம் தென்னாட்டின் பெருமை, இந்தியாவின் பெருமை. இந்தப் பயணத்தில் தான் சந்தித்த சவால்களையும் அவற்றை எதிர்கொண்டு சாதித்த சம்பவங்களையும் விவரிக்கிறார் திரு.K.R. நாகராஜன்.

வேட்டி நெய்யும் நெசவாளர்களின் துயர வாழ்க்கையைப் பார்த்துவிட்டு, அவர்களின் கண்ணியமான வாழ்வுக்காக, தான் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தை ஆரம்பித்த தருணத்தையும், வேட்டி அணிந்து இருந்ததற்காக ஒரு நட்சத்திர ஹோட்டலில் திரு. K.R. நாகராஜன் அவர்களை உள்ளேவிட மறுத்தபோது எடுத்துக்கொண்ட உறுதியையும் நெகிழ்ச்சியாக விவரிக்கிறார் அவர்.

இந்த வீடியோவைப் பார்த்துவிட்டு வந்த நூற்றுக்கணக்கான வாழ்த்துகளே, இதன் சிறப்புக்குச் சாட்சி. அந்த வாழ்த்துகளில் ஒன்று இங்கே:

‘கோபுரம் போல் உயர்ந்து, சிகரம் போல் அழகுடன் காட்சியளிக்கும் அற்புதங்களின் சாட்சி இன்று நம் கண்முன்னே. ராமராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர்–தலைவர் அருள்நிதி K.R. நாகராஜன் ஐயா அவர்களின் – எளிமையும் கனிவும் நிறைந்த பெருமகனின் பெருஞ்சாதனை.

‘புதிய ராமராஜ் உலகம்’ எனும் பிரமாண்ட உயர்வைக் காணும் அரிய தருணத்தை நாம் பெற்றுள்ளோம். இன்னும் ஆயிரம் ஆயிரம் உயரங்களை எழில்மிகு வளர்ச்சியுடன் பெற எங்கள் உள்ளங்கனிந்த பாராட்டுகள், வாழ்த்துகள், பிரார்த்தனைகள் அனைத்தும் அர்ப்பணிக்கப்படுகின்றன. குருவின் அருளும், ஆசிகளும், பேராற்றலின் கருணையும் தங்களுக்கு என்றும் துணையாக இருந்து, வாழையடிப் பரம்பரையாக வளமும் பரிபூரணமும் குவியட்டும்.

இந்திய தேசிய விருது பெறத் தகுதியானவை உங்களது சாதனைகள். சத்தமில்லா அமைதிப் புரட்சியாகத் தொழில் வளத்திலும், வியாபார உயர்விலும், தேசியப் பாரம்பரிய அடையாளத்தைத் தலைமுறைகள் தழுவிப் பேணும் பண்பாட்டிலும் திகழ்கின்றன. அற்புதமான பாரதத்தின் பண்பாட்டைப் பேணிக்காக்கும் தங்களது உழைப்புக்கும் உயர்வுக்கும் எங்கள் வணக்கங்கள், வாழ்த்துகள், நன்றிகள்.

**வாழ்க வளமுடன் ஐயா!’**

**அன்புடன்,**

**ஆறுச்சாமி**

வளம் குழுமம்–பொள்ளாச்சி.

**இதுபோன்ற எண்ணற்ற வாழ்த்துகள் ராம்ராஜ் காட்டனின் அர்த்தமுள்ள வளர்ச்சிப் பயணத்திற்குச் சிறந்த அங்கீகாரமாக அமைந்துள்ளது. இந்த வீடியோவை நீங்களும் காண இந்த க்யூ.ஆர் கோடை ஸ்கேன் செய்யவும்.**

# வாழ்வை வளமாக்கும் 10 விதிகள்!



- எவ்வளவு தலை போகிற அவசரமாக இருந்தாலும், ஒரு சமயத்தில் ஒரே ஒரு வேலையை மட்டுமே செய்யுங்கள். பல வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டால், எதையும் முடிக்க முடியாது.
- ஒரு பிரச்னை வரும்போது பதறாதீர்கள், அவசரமாகச் சரிசெய்யக் களத்தில் இறங்காதீர்கள். முதலில் பிரச்னையை முழுவதும் புரிந்துகொள்ளுங்கள். அதன்பின் உங்கள் எதிரில் இருக்கும் தீர்வுகளை ஆராயுங்கள். எது சிறந்த தீர்வு என்று தெரிந்துகொண்டு செயலில் இறங்குங்கள்.
- அடுத்தவர்கள் சொல்வதை எப்போதும் காது கொடுத்துக் கேளுங்கள். அவர்கள் சொல்ல வந்ததை முழுவதும் சொல்லட்டும். குறுக்கே பேசாமல் உன்னிப்பாகக் கவனியுங்கள். கேட்பதை மனதில் வாங்கிக்கொண்டு பிறகு பதில் பேசுங்கள்.
- கேள்வி கேளுங்கள். மிகவும் அற்பமாகத் தோன்றும் சந்தேகத்தைக்கூடக் கூச்சமின்றிக் கேட்டுத் தெளிவு பெறுங்கள். எல்லாக் கோணங்களிலும் விடை தேடுங்கள். நீங்கள் தலையைப் பிய்த்துக்கொண்டு யோசிக்கும் ஒரு பிரச்னைக்கு இதன்மூலம் முற்றிலும் புதிய கோணத்தில் ஒரு தீர்வு கிடைத்தாலும் கிடைக்கும்.
- யாருடன் பேசினாலும், அவருடைய கண்களைப் பார்த்துப் பேசுங்கள். அடுத்தவர் உங்களிடம் பேசும்போது அவர் கண்களையும் முகபாவங்களையும் உன்னிப்பாகக் கவனிப்பது முக்கியம். கண்களைப் பார்த்துப் பேசினால், நீங்கள் எதிராளியின் நம்பிக்கையை எளிதில் பெறுவீர்கள்.
- மாற்றங்களை எளிதாக ஏற்றுக்கொள்ளுங்கள். நேற்று சரியான ஒன்றாக நாம் நினைத்தது இன்று மாறிவிடுகிறது. இன்றைய நியாயங்கள், நாளை வேறு மாதிரி மாறலாம். எல்லாத் தளங்களிலும் புதிய மாற்றங்களைத் திறந்த மனத்துடன் வரவேற்பது உங்கள் வெற்றியைச் சுலபமாக்கும்.
- தவறுகளைத் தயக்கமின்றி ஒப்புக்கொள்ளுங்கள். யாருமே இங்கு நூறு சதவிகிதம் கச்சிதமானவர்கள் இல்லை. தவறைப் புரிந்துகொண்டு, ஒப்புக்கொண்டு, திருத்திக்கொள்ள முற்பட்டால் யாருமே உங்களைத் தாழ்வாக நினைக்கமாட்டார்கள். மாறாக, உங்கள் மதிப்பு உயரக்கூடும்.
- சொல்ல வந்த ஒரு விஷயத்தை எளிமையாகச் சொல்லுங்கள். சுற்றி வளைத்துப் பேசுவதோ, ஜாடைமாடையாகப் பேசுவதோ, கேட்பவர்களுக்குப் புரியாதபடி பேசுவதோ, உங்கள் அறிவுத்திறனை வெளிக்காட்ட முயலும் பெருமைப் பேச்சுகளோ தேவையில்லை. ஒரு குழந்தைகூடப் புரிந்துகொள்ளக்கூடிய எளிய முறையில் பேசுங்கள். அதற்குத்தான் எதிர்பார்த்த பலன் இருக்கும்.
- எப்படிப்பட்ட சூழலிலும் அமைதியாக இருங்கள். வீட்டிலோ, வெளியிலோ எங்குதான் பிரச்னைகள் இல்லை? நம்மை உடனடியாகக் கோபத்தில் கொதிக்க வைக்கும் விஷயங்களுக்குக் குறைவா என்ன? சட்டென்று வெடிக்காமல் அமைதி காட்டுங்கள். சொல்ல வேண்டியதைப் பிறகு அழுத்தமாகவும் நிதானமாகவும் யோசித்துச் சொல்லுங்கள். படபடவென்று பொரிந்து தள்ளுவது சுலபம். ஆனால் அது பிரச்னையை இன்னும் மோசமாக்கிவிடும். அதனால் இழப்பு உங்களுக்குத்தான்.
- எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் புன்னகை செய்ய மறக்காதீர்கள். ஒரு சிறு புன்னகை பல சிக்கல்களைத் தீர்க்கும். உங்களுக்குப் புதிய கதவுகளைத் திறந்து வைக்கும். உங்கள் வாழ்வை இன்னும் இனிமையாக்கும்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Inners for Winners
RAMRAJ
VESTS
BRIEFS • TRUNKS
Shreyas Iyer - Cricketer
SCAN QR CODE FOR
STORE LOCATION
SUKRA
SUPER FINE COTTON VESTS
ROMEX
SUPERIOR BANIANS
RISE-UP
PREMIUM BANIANS
ACOSTE
LUXURY INNERWEARS
Breeze
Eye Let Vests
WinStripe
STRIPED BANIANS
ARCHERY
GYM VEST
COMPACT
PREMIUM COTTON RIB VESTS
LITTLE STARS
KIDS INNERWEARS
Available at Ramraj Showrooms and All Leading Textile Shops | Shop Online at www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-09-2025. Posted at Tirupur BPC on 5th of every month.

